Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 25 (01.12.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 61


NEW NAVENA NAKAIYAKAM

நியூ நவீனா நகையகம்

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

189, Kasthuriar Road, Jaffna.

(சி-244)

## தலைவர் பிரபாவுக்கு யாழ். ஆயர் பாராட்டு!



(யாழ்ப்பாணம்)

சமாதானப் பாதையில் வெற்றிகரமாக முன்னேறிச் செல்வதற்கும் அமைதி வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்வந்தமையையிட்டும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு யாழ். ஆயர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்.ஆயர் கிளிநொச்சிக்கான விசேட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்ற சமயம் - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் உரையாடினார். இவ்வுரையாடலின் போது சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடினர். சமாதான (10 ஆம் பக்கம் பார்க்க)




### விண்ணாணம் விநாசியர்



கொழும்பில சந்திரிகா, சிஹல உறுமய இருக்கேக்க சுவாரசியங்களுக்கு குறைவில்லை...

# பிரதமரின் விசேட தூதுவர் நேற்று திடீர் யாழ். விஜயம்

## இயல்புநிலை தோன்றத் தாமதமேன்? நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார்!

(யாழ்ப்பாணம்)

**ஓய்வுபெற்ற பிரிட்டிஷ் எஸ்.ஏ.எஸ். படைப்பிரிவின் கட்டளை அதிகாரி ஜெனரல் சேர் மைக்கல் ரோஸ் நேற்று யாழ்ப்பாணத்திற்கான திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு, பிரதமர் ரணிலின் தூதுவராக வந்திருந்தார்.**

வடபகுதியில் இயல்பு நிலை தோன்றுவதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிவதற்காக ஓய்வு பெற்ற பிரிட்டிஷ் படை அதிகாரி ஜெனரல் சேர் மைக்கல் ரோஸ், நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வருகைதந்த இவர், குடாநாட்டில் பலதரப்பட்ட மட்டங்களில் கலந்துரையாடல்களை நடாத்தினார்.

இக்கலந்துரையாடல்களின் போது, குடாநாடு உட்பட வடபகுதியில் வாழும் மக்களின் வாழ்வில் இன்னமும் முழுமையான இயல்பு நிலையும் சகஜ வாழ்வும் ஏற்படாமைக்கான காரணங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இங்கிலாந்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான இவர், ஒரு தசாப்தத்திற்கு மேலாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மிக நெருங்கிய நண்பராகவும் (10 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைப் பிரச்சினையில் வெளியார் தலையீட்டை இந்தியா விரும்பவில்லை

#### 'இந்து' பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இந்தியா கலந்துகொள்ளாமைக்கு சட்டப்பிரச்சினைகள் மட்டும் காரணமல்ல என்றும் - இந்தப் பிராந்தியத்துக்கு வெளியிலுள்ள நாடுகள் இலங்கைப் பிரச்சினைகளில் தலையிடுவதை விரும்பாததும் ஒரு காரணம் எனவும் புதுடெல்கியிலுள்ள வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிராந்தியத்துக்கு வெளியிலுள்ள நாடுகளின் தலையீடுகள் குறித்து புதுடெல்கி அதிருப்தி கொண்டுள்ளது எனவும்,

இலங்கை எதிர்க்கட்சிகள் கூட இந்தியா புறக்கணிக்கப்படுவதை விரும்பவில்லை என்றும் சென்னையிலிருந்து வெளியாகும் 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

### க.பொ. (சா.த.) பரீட்சை நாளை ஆரம்பம்!

க.பொ.த (சா.த) பரீட்சை இலங்கை முழுவதும் நாளை ஆரம்பமாகிறது. இப்பரீட்சை 13 ஆம் திகதி வரை நடைபெறும். 3894 பரீட்சை நிலையங்களில் மூன்று லட்சத்து எண்பத்து மூவாயிரத்துப் பதினைந்து பாடசாலைப் பரீட்சார்த்திகளும், ஒரு லட்சத்து முப்பதாயிரத்து 851 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இவ்வாண்டு தோற்றவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## அரச பயங்கரவாதத்தினாலேயே தமிழ்க் குழுக்கள் ஆயுதமேந்தின

### சொல்கிறார் ஜனாதிபதி சந்திரிகா

அரச பயங்கரவாதம் காரணமாகவே, தமிழ்க் குழுக்கள் ஆயுதம் ஏந்தும் நிலை உருவாகியது. - இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் மக்கள் பூங்காத் திடலில் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கும் வைபவத்திலேயே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

1983 இலேயே மேற்கொள்ளப்படவேண்டிய சமாதான முயற்சிகள் தற்போதுதான் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## கம்பஹா மாணவர்கள் 750 பேர் யாழ்.வந்தனர்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 750 மாணவர் அடங்கிய குழு, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்தது.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 22 பாடசாலைகளிலிருந்து 750 மாணவர்களும், ஆசிரியர்களும் கொண்ட குழுவினர் வடக்கு, தெற்கு சமாதான ஒருங்கிணைப்பு ஒன்றை மேற்கொள்ளவென யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளனர்.

இவர்கள் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 22 பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் அந்தந்த பாடசாலை மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் நெருக்கமான உறவைப் பேணவும் உள்ளனர்.

அடுத்த ஆண்டில், தற்போது யாழ்ப்பாணத்தில் இவர்கள் தங்கியிருக்கும் 22 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் கம்பஹா மாவட்டத்திலுள்ள மேற்படி குழுவினரின் பாடசாலைகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளையும் புனர்வாழ்வு அமைச்சு மேற்கொள்கின்றது.

## நாளைய பேச்சில் நிதிப் பயன்பாடு குறித்தே விரிவாக ஆராயப்படும்!

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் நாளை ஆரம்பமாகவுள்ள அரச-புலிகள் தரப்புப் பிரதிநிதிகளுக்கு இடையிலான சமாதானப் பேச்சுக்களின்போது - ஒஸ்லோவில் பெறப்பட்ட நிதியை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து முக்கியமாக ஆராயப்படும் என நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அரச செயலாளர் ஒலிவ் கிஜோர்வன் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோ மாநாட்டில் இலங்கைக்கு 70 மில்லியன் டொலர்கள் உதவியாக வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தே ஒஸ்லோவில் நாளை நடைபெறும் பேச்சுக்களில் ஆராயப்படும்.

நோர்வே அரசாங்கம் நிதியுதவிகளைப் பெற்றுக் கொடுக்குமே (10 ஆம் பக்கம் பார்க்க)

## அலரி மாளிகையில் தமிழ்ச்செல்வன்; உடனடியாகக் கைது செய்யுங்கள்!

### சிஹல உறுமய பொலிஸிடம் முறைப்பாடு

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை உடனடியாகக் கைதுசெய்யுமாறு கடந்த 27 ஆம் திகதி, சிஹல உறுமய பொலிஸ் தலைமைக் காரியாலத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

தமிழ்ச்செல்வன் அலரிமாளிகையில் பேசிக் கொண்டிருக்கிறார், உடனடியாக சென்று அவரைக் கைது செய்யுங்கள் என்று முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிஹல உறுமய கட்சியின் தலைவர் நெவில் கருணதிலக, தனாதிகாரி உதய கம்மன்வில, கில்டா குணரத்ன ஆகியோரே பொலிஸ் தலைமையகத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.

SERENDIB

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!

விமான சேவை

J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019

(சி-148)

# ஆஷஸ் கிண்ண டெஸ்ட் திணறுகிறது இங்கிலாந்து

ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் டெஸ்ட்டில் தொடர்ந்து நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்திலும் இங்கிலாந்து அணியின் நிலை இக்கட்டாகவே காணப்பட்டது. அவுஸ்ரேலிய அணியின் ஒவ்வொரு வீரரும் எல்லைக்கோட்டைத் தாண்டி பந்தைச் செலுத்தியபடியே இருந்தனர். கில் கிறிஸ்ட் 28 பந்து வீச்சுக்களில் 38 ஓட்டங்களைப் பெற்றார். ரியூடரிடம் பிடிகொடுத்து இறுதியில் அவர் ஆட்டமிழந்தார்.

இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியுள்ள இங்கிலாந்து - ஆரம்ப நிலையிலேயே ஆட்டம் கண்டுள்ளது. பிரட்லீயின் பந்து வீச்சில் ட்ரெஸகோதிக் நான்கு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மூன்றாவது டெஸ்டின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் ஸ்கோர் விபரம் - இங்கிலாந்து 185 மற்றும் 33 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் இழப்பு, அவுஸ்ரேலியா முதல் இன்னிங்ஸில் 456 ஓட்டங்கள்.

# தொண்டராசிரியராகப் பணியாற்றுவோர் ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்கப்படார்

## கல்வி அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரிய சேவைக்குள் தொண்டர் ஆசிரியர்கள் இனிமேல் உள்ளீர்க்கப்படமாட்டார்கள் என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களை உள்ளீர்ப்புச் செய்வது, ஆசிரியர் சேவையின் தேசியக் கொள்கைத் திட்டத்திற்கு முரணாது எனவும், இனிவரும் காலங்களில் ஆசிரிய சேவை நியமனங்களுக்குள் கல்வியியற் கல்லூரிப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்து வெளியேறியவர்கள், மற்றும் பல்கலைக்கழகத்தால் வெளியேறிய பட்டதாரிகள் ஆகியோரே உள்வாங்கப்படுவர்கள் எனவும் - அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்று நிருபங்கள் - மாகாண, பிராந்திய, வலயக் கல்வி பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் கல்வித் தகைமை குறைந்தோரை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கியதால்தான் கல்வித்தரம் பாதிக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நேற்றைய போட்டியிலிருந்து...


கில் கிறிஸ்ட்


கில் கிறிஸ்ட்டை ஆட்டமிழக்கச் செய்யும் ரியூடர்


பிரட்லி


பாராட்டுப் பெறும் கிரேயக் வைற்


28 பந்தில் 38 ஓட்டங்கள்-கிறிஸ்ற்


ஸ்ரீவ் வோ

# இன்றைய நாள் இனிய நாள்

**01-12-2002 - ஞாயிற்றுக்கிழமை**

**சித்திரபானு வருடம் கார்த்திகை மாதம் - 15 ஆம் திகதி**

**திதி** :- அபரபட்ச துவாதசி, இரவு 8.09 வரை அதன்மேல் திரயோதசி

**நட்சத்திரம்** :- சித்திரை 4.03 வரை அதன்மேல் சுவாதி.

**ராகுகாலம்** :- 4.04 - 6.14

**சுபநேரம்** :- 9.14 - 10.44

மேடம் :- தேகசுகம் நன்று, பணவரவு, அயலவர்களின் மதிப்பைப் பெறல், கல்வி முன்னேற்றம்.

இடபம் :- பணவரவு நன்று, புதிய கடன் வசதி, எடுத்தகாரியம் வெற்றி, தெய்வ வழிபாடு, கல்வி முன்னேற்றம்.

மிதுனம் :- மனச் சஞ்சலம், புத்திரரால் கவலை, சமூகசேவையில் குந்தகம் கேட்டல், கல்வியில் ஊக்கம் வேண்டும்.

கர்க்கடகம் :- மனக் கவலை, வாகனச் செலவு, வீட்டில் பெண்கள் சுகயீனம், வீண் அலைச்சல். கல்வி முன்னேற்றம்.

சிங்கம் :- காரிய சித்தி, உள வலிமை, தெய் வழிபாடு, சமயநூல் பாராயணம், கல்வி முன்னேற்றம்.

கன்னி :- வீட்டில் பொருளாதாரக் கஷ்டம், தன்னை அறியாத செலவு, வாக்குவாதம், கல்வி முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

துலாம் :- விருந்தினர், நண்பர்கள் உறவு, தெய்வ வழிபாடு, சமயநூல் வழிபாடு, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

விருச்சிகம் :- தூரப் பிரயாணம் தவிர்க்க வேண்டும், மனதை ஒருநிலைப்படுத்துவது உத்தமம், வீண் செலவு, கல்விச் சமநிலை.

தனு :- உளப்பூரிப்பு, பெண்கள் மகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, அறுசுவை உண்டி, கல்வி முன்னேற்றம்.

மகரம் :- தொழில் சிறப்பு, முயற்சி திருவினையாக்கும், பணவரவு, பொதுநலவாதி எனப் பெயர்பெறுதல், கல்வி முன்னேற்றம்.

கும்பம் :- உடல்நலக் குறைவு, வைத்தியச்செலவு, தேவையற்ற பய உணர்வு, சத்துரு விருத்தி, கல்வி முன்னேற்றம்.

மீனம் :- உடல்நலக் குறைவு, தேவையற்ற பிரச்சினை, புதிய காரியங்களில் ஈடுபடுதல் தவிர்க்க வேண்டும், கல்வி முன்னேற்றம்.


**சிறு விளம்பரம்**

**மணமகன் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 36 வயதுடைய திருவோண நட்சத்திரம், செவ்வாய் தோஷமற்ற பெண்ணிற்கு, மணமகன் தேவை. அரச உத்தியோகத்தர், வெளிநாட்டில் P/R உடையோர் விரும்பத்தக்கது. சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். விளம்பர இல.04 மே/பா. நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.

(சி-246)




கவிஞர் இ.முருகையன் எழுதிய 'உண்மை' நாடக நூல் வெளியீட்டுவிழா கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. நூலில் உள்ள 'குற்றம் குற்றமே' எனும் நாடகம் கல்லூரி மாணவர்களால் நடித்துக் காட்டப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.


**விசேட மலிவு விற்பனை**

- ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள்,
- தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடுகள்

புத்தாண்டு தினத்தையொட்டி

01.12.2002 தொடக்கம் 15.01.2003 வரை. ரூபா 1000/- பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

ரூபா 5000/- பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுடன் புத்தாண்டுப் பரிசும் வழங்கப்படும்.

அரிய சந்தர்ப்பத்தைச் சகல நூலகங்களும் பயன்படுத்திக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம் -

**வசந்தம் புத்தகசாலை**

405, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்

(051)

T.V, டெக், CD, VCD என்பவற்றை துரித கதியில் திருத்தம் செய்து கொள்ளவும், உதிரிப்பாகங்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்

**A.K. Electronic**

245, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-169)

**MEDICAL CHECK UP**

**வைத்திய பரிசோதனை**

**நோய் வருமுன் காப்போம்!**

**திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்!**

✹40 வயதுக்கு மேற்பட்ட நோய் உள்ள. நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐ செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.

✹X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள். சிறுநீர்ப் பரிசோதனை. இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விவரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்) ஆஸ்பத்திரி முன் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-237)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித்குமார், வசுந்தராதாஸ், மீனா நடித்த

**சிட்டிசன்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00

(சி-187)

**ராஜா** யாழ்ப்பாணம்.



நான்காவது வாரமாக அஜித் (இரட்டை வேடம்) கிரண், மீனா நடித்த

**வில்லன்**

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)

இயக்கம்: K.S.ரவிக்குமார்.

(சி-151)

**DIPLOMA IN MASS MEDIA**

தபால் மூலம் ஊடக டிப்ளோமா பயிற்சி/நெறி

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை மற்றும் வெகுஜன ஊடகங்கள் பற்றிய கற்கையும் இறுதியில் கலையக பயிற்சியும் வழங்கப்படும்

பயிற்சிக் காலம் 6 மாதம்

உலகெங்கும் வாழும் ஈழத்தமிழரும், தொழில் புரிவோரும், இல்லத்தரசிகளும் பயிலலாம்

பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

M.M.I.C மாணவர்கட்கு சலுகைகள் உண்டு

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி :

தபால் மூலம் ஊடக டிப்ளோமா பயிற்சி நெறி

**Mass Media Institute of Ceylon**

2nd Floor, "Colombo Plaza", 50, Galle Road, Colombo - 06.

# வளைகுடாப் பிரச்சினையை விட இலங்கையில் சர்வதேசம் ஆர்வம்

## - தொழிற் கட்சித் தலைவர் ஜக்லன்ட் பேட்டி -

(ஒஸ்லோ)

இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின்னர் - நோர்வே நாட்டில தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகளை நாம் பலவந்தமாகத் திருப்பி அனுப்பிவிடுவோம் என எவரும் அச்சம் கொள்ளத்தேவையில்லை. அவ்வாறு ஒரு போதும் நடக்காது என நோர்வேயின் அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஒஸ்லோவுக்கு சென்றிருந்த இலங்கை ஊடகவியலாளர்களுக்கு அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும், நோர்வே நாடாளுமன்றக் கட்டடத்தில் வரவேற்பளித்த பின்னர் இந்த மாநாடு நடத்தப்பட்டது.

தொழிற்கட்சித் தலைவரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான தோர்பிஜன் ஜக்லன்ட் தலைமையில் இடம்பெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில், நோர்வேயின் பல்வேறு கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்து தெரிவித்த தொழிற்கட்சித் தலைவர் ஜக்லன்ட்,

நோர்வேயிலிருந்து இலங்கை அகதிகள் பலவந்தமாக வெளியேற்றப்பட மாட்டார்கள். அனால், சமாதானத் தீர்வு ஏற்பட்ட பின்னர் ஒவ்வொருவரது விபரங்களும் தனித்தனியாக ஆராயப்படும்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் சமாதான தீர்வு காணும் விடயத்தை நோர்வே நாட்டினது தேசிய விடயமாகவே கருதுகின்றோம். இதில் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. நோர்வேயில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்த சமாதான முயற்சிகள் தங்குதடையின்றித் தொடரும்.

இலங்கையின் சமாதான முயறசிகளில் ஒவ்வொரு நோர்வே குடிமகனுக்கும் பங்கு இருக்கின்றது. இதற்காக இவர்கள் ஒவ்வொருவரும் வரிசெலுத்திப் பங்களிப்புச் செய்கின்றனர்.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் குறித்து நோர்வே அரசாங்கம் அனைத்துக் கட்சிகளுக்கும் அவ்வப்போது விளக்கமளித்து வருகின்றது. இதற்கென பாராளுமன்றக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதனூடாக அனைத்து விடயங்களும் அரசாங்கத்தால் தெளிவுபடுத்தப்படும்.

மத்திய கிழக்கில் சமாதானததை ஏற்படுத்துவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். இதற்கு உலக நாடுகள் கொடுத்த ஆதரவினை விட இலங்கை விடயத்தில் அதிக ஆதரவினை அளித்து வருகின்றன. இது மகிழ்ச்சிக்குரியதொன்று என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழீழ மாவட்ட நீதிமன்று திருமலையில் நாளை திறப்பு

(பண்டத்தரிப்பு)

திருகோணமலை மாவட்ட தமிழீழ நீதிமன்றம் நாளை 2ஆம் திகதி மூதூர் கட்டைபறிச்சானில் திறந்துவைக்கப்படவுள்ளது. கிழக்கு மாகாணத்தின் இரண்டாவது நீதிமன்றமாக இது அமையவுள்ளது.

தமிழீழ நீதி நிர்வாக பொறுப்பாளர் பரா நீதிமன்றத்தைத் திறந்துவைப்பார். இந் நீதிமன்றத்துக்கு நீதியாளர்களாக மயூரன், பாதர் சின்னத்துரை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்கிலங்கையில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழீழ காவல்துறையை ஆரம்பித்ததை அடுத்து - தற்போது நீதிமன்றங்களை அமைத்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்தின் முதலாவது நீதிமன்றம் மடடக்களப்பு பட்டிப்பளையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(43)

# 22 ஹெலிகள், 3 விமானங்கள் கொள்வனவில் பெரும் மோசடி!

(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்கு கடந்த சில வருடங்களில் 22 ஹெலிகொப்டர்கள் மற்றும 3 விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்ட முறை தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவணங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றி உள்ளனர்.

இவை கொள்வனவு செய்யப்பட்ட போது முறைகேடுகள் இடம் பெற்றனவா என்று ஆராயவே இந்த ஆவணங்களை கைப்பற்றியுள்ளதாகப் விசாரணைகளை மேற்கொள்ளும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மூன்று சீ-130 ரக சரக்கு விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டது குறித்து இந்த விசாரணையின் போது விசேட கவனம் செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக விமானப்படை உயர் அதிகாரிகளை விசாரிக்க இருப்பதாகவும், இரகசியப் பொலிசார் தெரிவித்தனர்.



யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிக்கண்மையில் இராணுவக் காவலரண்கள் அமைந்துள்ளதால் - இரவு நேரங்களில் இங்கு ஊழியர்கள் செல்வதற்கு அஞ்சுகின்றனர். படத்தில் இரத்த வங்கியையும் அதற்கு அப்பால் இராணுவக் காவலரண் இருப்பதையும் காணலாம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### கல்வியியல் கல்லூரி கொடுப்பனவு

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி மாணவர்களின நவம்பர் மாதக் கொடுப்பனவு, டிசம்பர் மாத விடுமுறை காரணமாக - இன்று காலை 9.30 மணிக்கு பீடாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. எனவே சகல உள்ளகப்பயிற்சி மாணவர்களையும் கல்லூரிக்கு வருகை தருமாறு - கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார்.

### மக்கள் வங்கி அடகு நகைகள் மீளப் பெறலாம்

மக்கள் வங்கியில் நகை அடகு வைத்து - மீளப் பெறுவதற்காக செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் பணம் கட்டியவர்களுடைய நகைகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

எனவே அடகு நகைகளுக்காகப் பணம் கட்டியவர்கள் - தமது நகைகளை அந்தந்தக் கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம் என மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை ஊர்காவற்றுறை கிளைக்குரியவர்கள் தமது அடகு நகைகளை யாழ்ப்பாணம் ஸ்ரானலி வீதி, மக்கள் வங்கிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திரைப்படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகும் திரைப்பட வடடமும் இணைந்து வழங்கும் திரைப்படகாட்சித் தொடரில் ஏ.ஜெயராஜ் இயக்கிய 'DESADANAM' எனும் மலையாளத் திரைப்படம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

### கத்தோலிக்க இளைஞர் தினம்

யாழ்.மறைக்கோட்ட கத்தோலிகர்களுக்கான இளைஞர்தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொண்டாடப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக காலை 9.30 மணிக்கு பத்திரிசிரியார் கல்லூரியின் மத்தியூஸ் ஆலயத்தில் பேராயர் அதி.வண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரால் திருப்பலி ஒப்புக் கொடுககப்படும்.

இதனைத் தொடர்ந்து மத்தியூஸ் மண்டபத்தில் உரைகள், கலை நிகழ்வுகள், போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் எனபன இடம்பெறவுள்ளன.

### 12 வருடங்களாக மூடப்பட்ட வீதி திறந்துவிடப்பட்டது

(மட்டக்களப்பு)

கடந்த 12 வருடங்களாக மூடப்பட்டிருந்த மட்டக்களப்பு சப்பல் வீதி பொதுமக்களின் போக்குவரத்திற்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது. வவுணதீவில் அண்மையில் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய இந்த வீதி, படையினரால் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 5.02 |
| சுபஹ் | 5.17 |
| உதயம் | 6.38 |
| லுஹர் | 12.31 |
| அஸர் | 3.53 |
| ம.்.ரிப் | 6.23 |
| இஷா | 7.37 |

## மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக

# பேச்சுக்கு வரும் ராணுவத் தளபதிகள் படை நலனையே முன்வைக்கின்றனர்!

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை விசேட பேட்டி

மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை நீக்கி, இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்காக எம்மால் முன்வைக்கப்பட்ட பிரசசினைகளுக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமென அடுத்தமாத நடுப்பகுதியில் படைத்தரப்புடன் நடைபெறும் பேச்சில் உறுதியாக வலியுறுத்தப்படும். இவ்வாறு தெரிவித்துள்ளார் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை.



நடைபெற்றுவரும் சமாதான பேச்சுக்கள் தொடர்பாக எமது செய்தியாளர்க்கு விசேட பேட்டியளித்த கேணல் சூசை மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான பேச்சு ஆரம்பித்த பத்து மாதங்கள் கடந்துவிட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்போது முன்வைக்கப்பட்ட விடயங்கள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இரண்டாவது சுற்றுப் பேச்சின்போது மக்களுடைய பிரச்சினை தொடர்பாக வலியுறுத்தப்பட்டது.

மன்னார், தீவகம், வடமராட்சி கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதுடன் வலைகளையும் வெட்டிச் செல்கின்றனர். மீனவர்களுக்கு, கடந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்யாத போதும் அவர்களது உடமைகள், சொத்துக்கள் அழிக்கப்பட்டு வருவது வேதனைக்குரியது.

காலம் காலமாக கடற்தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களின் வள்ளம் தரிக்கும் இடங்கள், வலை பிரிக்கும் இடங்களில், படையினர் நூறு மீற்றருக்கு ஒரு காப்பரணையும் கம்பி வேலிகளையும் அமைத்துள்ளனர். இதனால் கடற்தொழிலாளர்கள் இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்குள்ளாகின்றனர். இததகைய பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வராமல் இயல்பு நிலை தோன்ற மாட்டது. கடற்தொழிலுக்குச் சுதந்திரமாகச் செல்லலாம் எனக் கூறுவது எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாதது.

இந்திய மீனவர்கள் அத்துமீறிக் கடற்தொழிலில் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்துங்கள். முடியாவிட்டால் எம்மிடம் விடுங்கள் எனக் கோரினோம். இன்றுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை.

வடமராட்சி கிழக்கு பிரதேசம், மருதங்கேணி - பருத்தித்துறை வீதி மூடப்பட்டுள்ளதனால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பிரதேசத்தின் அபிவிருத்தி பாதிப்படைந்துள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அரசாங்க வைத்தியசாலை எதுவுமில்லை. தனியே, புலிகளால் அமைக்கப்பட்ட திலீபன் வைத்தியசாலை மட்டும் 14 ஆயிரம் மக்களுக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்க முடியும்? இராணுவ நடவடிக்கையால் மருதங்கேணி வைத்தியசாலை அழிந்துவிட்டது. இப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் மந்திகை மருத்துவமனைக்கு சிகிச்சை பெற 18 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. செம்பியன்பற்று முதல் சுண்டிக்குளம் வரையான பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் வடமராட்சி பிரதேசத்தில் இருந்தே கடமைக்கு வருகின்றனர். நீண்டதூரம் சுற்றியே கடமைக்குச் செல்லும் ஆசிரியர்களால் எவ்வாறு கற்பிக்க முடியும். இதனால் நாகர்கோவில் வீதித்தடையை நீக்கி, போககுவரத்திற்கு அனுமதிக்குமாறு வலியுறுத்தி வருகின்றோம். இதற்கு படைத்தரப்பு பின்னடித்து வருகின்றது.

இவ்வாறான அடிப்படை பிரச்சினைகளை நீக்கி மக்களுடைய இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துங்கள் என 2 ஆம் கட்டப் பேச்சின போது எம்மால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இப்பிரச்சினை தொடர்பாகப் பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தின் மூலம் பேசித் தீர்க்கலாம் என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் மேற்படி பிரச்சினைகளுடன் பல பிரச்சினைகள் குறித்து வலியுறுத்தப்பட்டது. அதற்குப்பின் யாழ்ப்பாணத்தில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டங்களில் இந்த பிரச்சினைகள் தொடர்பாக எந்தவித முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக இம்மாத நடுப்பகுதியில் ஓமந்தையில் நடைபெறவுள்ள பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் வலியுறுத்தவுள்ளோம். எம்மால் முன்வைக்கப்பட்ட விடயங்களுக்கு உறுதியான முடிவு கேட்கப்போகிறோம்.

எம்மால் முன்வைக்கப்பட்ட அனைதது விடயங்களும் நிறைவேற்றப்பட்ட பின்புதான் அடுத்த கட்டப் பேச்சு தொடர்பாகக் கதைப்போம்.

இராணுவ ரீதியான சிந்தனைகளை மட்டும் கொண்டிருக்கும் தளபதிகள் - சரத் பொன்சேகா, இரட்ணசபாபதி, கடற்படைத் தளபதி வீரசேகர எல்லோருமே இராணுவ ரீதியான நலனில் மட்டும் சிந்திக்கின்றனர். மக்களுடைய இயல்புநிலை பற்றி சிந்திக்கிறார்கள் இல்லை என கேணல் மேலும் தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

# உயர்பாதுகாப்பு வலயத்தினுள் சிக்கியுள்ள விவசாயிகளின் தங்கச்சுரங்கமான வலி.வடக்கு

## - பண்டத்தரிப்பு கருத்தரங்கில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் -



யாழ்.ஆயர்

விவசாயிகளின் தங்கச்சுரங்கமான வலி.வடக்குப் பகுதி இராணுவத்தின் பாதுகாப்பு வலயத்தால் சூழப்பட்டிருப்பதால் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக பண்டத்தரிப்பில் அண்மையில் நடைபெற்ற 'உயர் பாதுகாபபு வலயங்களும் சமாதான முயற்சிகளும்' என்ற கருத்தரங்கில் யாழ். ஆயர் சௌந்தர நாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

'பர்கோப்' அமைப்பினால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் யாழ்., மன்னார் மறை மாவட்ட ஆயர்கள், கத்தோலிக்க மதகுருக்கள், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், இராணுவ அதிகாரிகள் எனப் பலதரப்பட்டவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

அமைதி திரும்பினாலும் - இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துதல், கண்ணிவெடிகள் ஆகியன முக்கிய பிரச்சினைகளாக இருக்கின்றன. இதனால் மீள்குடியமர்வுகள் தாமதமடைகின்றன.

அரசும் புலிகளும் பேச்சுக்களில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், ஆயர் மேலும் தெரிவித்திருந்தார். இக் கருத்தரங்கில் உரையாற்றிய வண. பிதா பேணாட் அடிகளார் -

சமாதான முயற்சிகள் தீவிரம் பெற்றுள்ள நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்களால் மக்களின் நடமாட்டம், மீள்குடியமர்வு தடுக்கப்படுவதானது - தெற்கு மக்கள் புரிந்துணர்வு உடன்பாட்டினால் முழு நன்மையையும் பெற, நாம் மட்டும் தொடர் துன்பங்களை அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோமே என்ற ஏக்கத்தையே மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

விவசாய நிலங்களில் புதிய புதிய படைமுகாம்கள் அமைக்கப்படுகின்றன. முன்னர் 30 சதவீதம் மீன் தேவையை நிறைவேற்றிய குடாநாட்டு மீனவர்கள், இன்று கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவிததார்.

# கோப்பாயில் கண்டெடுக்கப்பட்ட கைப்பை

(உரும்பிராய்)

உரும்பிராய் - கோப்பாய் வீதியிலிருந்து கைப்பையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கைப்பை கோப்பாய் தபாற்கந்தோரில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதனுள் அடையாள அட்டை, சிறுதொகைப்பணம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம என்பன உள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு தபால் அதிபர் கேட்டுள்ளார். (84)

# திக்கம் வடிசாலையை மீள ஒப்படைக்குமாறு கோரி பிரதமருக்கு கொத்தணி கடிதம்!

(வடமராட்சி)

திக்கம் வடிசாலையை மீண்டும் பனம் தொழில் வல்லுநர்களின் கூட்டுறவு அமைப்பான வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, மேற்படி கொத்தணியின் சார்பில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

சாதாரண தொழிலாளர்களான பனம் தொழில் வல்லுநர்களின் கூட்டுறவு அமைப்பான "வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிக்கு திக்கம் வடிசாலையை மீளப் பெற்றுத்தரல்" எனத் தலைப்பிட்டு 25.09.2002 திகதியிட்டு தங்களுக்கு முகவரியிட்டு பருத்தித்துறை உதவி அரச அதிபர் மூலமாக அனுப்பிய மேற்படி விடயம் தொடர்பான கடிதம் தொடர்பில், இன்றுவரை எதுவித பதிலும் கிடைக்காமை காரணமாக மிகுந்த கவலையடைகின்றோம்.

எம்மால் நிர்வகிக்கப்பட்ட கூட்டுறவு வடிசாலையானது, பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அக்கால புனர்வாழ்வு தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சரினால், வடிசாலை வரலாற்றுக்குப் புறம்பான தவறான தகவல்கள் புனையப்பட்டு அக்கால மந்திரி சபைக்குச் சமர்ப்பித்து, மந்திரி சபையின் தீர்மானத்தை நிறைவேற்றச் செய்த பின்பு, எம்மிடமிருந்த 600 இலட்சம் பெறுமதியான சொத்துக்களை பயமுறுத்திப் பறித்தெடுத்து, பனை அபிவிருத்திச்சபையிடம் ஒப்படைத்து தமது நலன்களை பெற்று வந்தது.

தாங்கள் கடந்த தேர்தலின் மூலம் பிரதம அமைச்சராக பதவியேற்றபோது, எமது உரிமைகளைப் பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்த கௌரவ இந்து கலாசார அமைச்சர் பதவியேற்றபின்னர், எமது சொத்தான திக்கம் வடிசாலை மீள எமது நிர்வகிப்பிற்கு கிடைக்கும் என மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தோம். ஆனால் ஒருவருடம் பூர்த்தியாகும் காலம் நெருங்கி வந்தபோதும் எமது தொழிலாளர் உரிமைகள் இன்று வரை மறுக்கப்பட்டு வருவதாகவே கருதுகிறோம்.

இந்நிலையிலேயே தங்களுக்கு எழுதிய 25.09.2002 திகதிய கடிதத்திற்கு மேலாக, கௌரவ இந்து கலாசார அமைச்சருக்கு 12.11.2002 திகதியிட்டு திக்கம் வடிசாலையை எமக்கு மீளவும் கையளிப்பது தொடர்பில், தங்கள் மந்திரி சபையிடம் எமது கோரிக்கையை சமர்ப்பித்து எமது சமூக நலன்களுக்கு உதவுமாறு கோரி ஓர் கடிதத்தை தொலைநகல் மூலம் அனுப்பியிருந்தோம். அது தொடர்பிலும் இன்று வரையும் எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

எனவே, தயவு செய்து சாதாரண பனம் தொழிலாளர்களாகிய எமது சமூக நலன் கருதியும் தொழிலாளர்களது உரிமைகளை வழங்கும் வகையிலும் மனித நேயத்தின் அடிப்படையில் இக்கோரிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து, தங்கள் மந்திரி சபையில் இவ்விடயத்தைச் சமர்ப்பித்து, ஓர் நல்ல தீர்மானத்தை எமக்கு நிறைவேற்றித்தந்து மீளவும் எமது வடிசாலையை நாமே நிர்வகிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றுத்தந்து உதவுமாறு யாழ்.மாவட்ட பனம் தொழில் வல்லுநர் குடும்பங்கள் சார்பிலும், பனை - தென்னை வள கூட்டுறவு நிறுவனங்கள் சார்பிலும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)



யா/ஸ்கந்தவரோயக் கல்லூரி அதிபர் அமரர் வி.சிவசுப்பிரமணியம் ஞாபகார்த்த விழா - கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது - சபா.புஸ்பநாதன நினைவுரையாற்றுவதையும், விழாவுக்குத் தலைமை தாங்கிய அதிபர் க.சிவாஜி, விவசாய பீடாதிபதி எஸ்.இராசதுரை, பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் டாக்டர் சிவானந்தராஜா, உதவிக் கல்விப்பணிப்பாளர் தற்பரானந்தன் மற்றும் எஸ்.சிவரட்ணம், டாக்டர் சிவானந்தன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# கிணற்றில் வீழ்ந்து யுவதி மரணம்!

(யாழ்ப்பாணம்)

நவாலியைச் சேர்ந்த யுவதி ஒருவர் கிணற்றுக்குள் விழுந்து மரணமடைந்ததாகக் கூறி, கடந்த வியாழனன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலம் ஒன்று கையளிக்கப்பட்டது.

நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த ம.கலையரசி (வயது 28) என்ற யுவதியே கிணற்றுக்குள் விழுந்து மரணமடைந்தவராவர். இவரது சடலம் நேற்று முன்தினம் மரண விசாரணையின் பின் உறவினர்களிடம கையளிக்கப்பட்டது. (லி)

# காணித் தகராறில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கைகலப்பில் முடிந்த காணித் தகராறினால் - யாழ்ப்பாணம், டேவிற் வீதியில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற இச்சம்பவத்தின் போது - க.அன்ரனிஸ் (வயது 20), டே.சிறில் (வயது 55) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# அன்னதான மடத்தில் கல்வி கற்கும் முன்பள்ளி மாணவர்கள்

(ஈவினை)

ஈவினை மத்தி, கற்பக விநாயகர் முன்பள்ளி மாணவர்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் ஆலய அன்னதான மடத்தில் கல்விகற்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

முன்பள்ளியின் கட்டட கட்டுமானப் பணிகளுக்காக வலி.தெற்குப் பிரதேச சபையால் ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக வழங்கப்படாத நிலையில், கட்டுமானப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அடுத்த கல்வியாண்டு முடிவதற்குமுன் இக்கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய்து தருமாறு அப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த கல்வியாண்டுக்கு கல்வி பயில அறுபது மாணவ, மாணவிகள் பதிவு செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்.



பெயர் : சி.வைஸ்ணவி
முகவரி: வல்லை வீதி, தொட்டிலடி, சங்கானை.

மூன்றாவது அகவையில்.



பெயர் : கு.பிரணவன்
முகவரி: மாப்பாணவூரி, காரைநகர்.

மூன்றாவது அகவையில்.



பெயர் : வ.மலர் பகின்ஷா
முகவரி: சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

நான்காவது அகவையில்.



பெயர் : சி.ஆதீஸன்
முகவரி: 'கங்கா போட்டோ' மீசாலை. (சுவிஸ்)

ஆறாவது அகவையில்.



பெயர் : இ.சிந்துஜன்
முகவரி: சேமன் வீதி, இடைக்குறிச்சி, கரவெட்டி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------------

முகவரி:------------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

குறிப்பு:- இம்மாத முடிவு மட்டும் ஐந்து கூப்பன்களை அனுப்பலாம்.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

விளையாட்டு அரங்கம்

# சந்தேகமில்லை இவர் சாதித்தே தீருவார்!



மிக அண்மையில் நடைபெற்று முடிவடைந்த சமாதான விளையாட்டு விழாவில் யாழ்.மாவட்டம் சார்ந்த மிகப் பலர் வெற்றிவாகை சூடியவர்களாகத் திரும்பியிருக்கிறார்கள்.

களுத்துறையில் நடைபெற்று முடிந்த சமாதான விளையாட்டு விழா பற்றியே இங்கு குறிப்பிடுகின்றோம். சமாதான விளையாட்டுவிழாவில் பங்குபற்றியவர்களைச் சந்தித்து உரையாட முயற்சித்தபோது, 200m ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டு முதலாம் இடம்பெற்ற மிதிலா கனகசிங்கத்தின் சந்திப்புடன் ஆரம்பிப்பது பொருத்த மாகப்பட்டது. இத்தகையவர்களின் சந்திப்பின் மூலம், எவ்வகையில் இவர்கள் தம்மை வளர்த்துக் கொண்டார்கள். இவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றவர்கள் யார். இவர்களின் மனதில் நிற்பவர்கள் யார் என்பன போன்ற பல்வேறு விடயங்களை விளையாட்டு ரசிகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் எனத் தோன்றியது.

**2001 - வட- கிழக்கு மாகாணப் போட்டிகள்**
**சிறந்த தட வீராங்கனை**
**சிறந்த கள வீராங்கனை**

**2002 - வட - கிழக்கு மாகாணப் போட்டிகள்**
**அதிசிறந்த தடகளவீரர்**
**(OUT STANDING ATHLETE)**

**2002 - தேசிய இளைஞர் விளையாட்டுவிழா**
**200m - 1ஆம் இடம்.**
**நீளம் பாய்தல் - 2ஆம் இடம்.**

**2002 - களுத்துறை சமாதான விளையாட்டு விழா**
**200m - 1ஆம் இடம்.**
**400m - 2ஆம் இடம்**
**நீளம் பாய்தல் - 3ஆம் இடம்.**

**வடக்கு - கிழக்கு மாகாணத்தின் புதிய சாதனை நேரங்கள் சில மிதிலாவிற்குரியன.**
**200m - 26.3 செக்கன்கள்**
**400m - 1நிமிடம் 0.8 செக்கன்கள்**
**நீளம்பாய்தல் - 5.27 மீற்றர்.**

தனது ஆரம்பக் கல்வியை அரியாலை சிறிபார்வதி வித்தியாலயத்தில் ஆரம்பித்த மிதிலா, தனது இடைநிலைக் கல்வியை திருக்குடும்பக் கன்னியர்மடத்தில் முடித்துக் கொள்கிறார். சிறுவயது முதலே சகல விளையாட்டுக்களிலும் திறமை பெற்றிருந்த இவர் அந்தந்த வயதுக்குரிய நிகழ்வுகளில் கலந்துகொண்டு பரிசில்கள் பெற்று வந்திருக்கின்றார். பாடசாலைக் காலத்தில், பாடசாலை மட்டம் முதல் மாவட்ட மட்டம்வரை நிகழ்வுகளில் வெற்றிபெறுவதென்பது மிகச் சாதாரணமானதொரு விடயமாகவே இவருக்கு இருந்திருக்கிறது. 100m, 200m, உயரம் பாய்தல், நீளம் பாய்தல் எனத் தொடங்கிய இவர் பாடசாலைக் காலத்தின் பின்னரே திட்டமிட்ட ஒரு பயிற்சி முறையின் மூலமே, உயர் தகமை பெற இயலும் என்பதைப் புரிந்து கொண்டு 200m, 400m, நிகழ்வில் இரண்டையும் தெரிவு செய்து கொண்டுள்ளார். 1994 இல் தனது பயிற்றுநர் செல்வராஜா ரமணனின் வழி காட்டலில், தனது முறையான பயிற்சியினை ஆரம்பிக் கின்றார். இக்காலகட்டத்திலேயே தனது முதன்மை நிகழ்வாக 200m ஓட்டத்தை தெரிவு செய்துகொள்கின்றார்.

பாரிய இடப்பெயர்வின் பின், மீளக் குடியமர்ந்த பின்னர் தன் பயிற்சிகளை தொடர்ந்து இவர் 1998 இல் AAA நடாத்திய டெக்கதொலன், ஹெப்டதொலன் (முறையே 10 மற்றும் 7 நிகழ்வுகளில் பங்குகொள்ளும் விளையாட்டுக்கள்) நிகழ்வுகளில் கலந்துகொண்டு, ஹெப்டதொலன் நிகழ்வில் 2ஆம் இடம் பெற்றுக்கொள்கின்றார். 1999 இல் 100m மற்றும் 200m நிகழ்வுகளில் வெற்றிபெற்ற இவர், 2000 ஆம் ஆண்டில் பேராதனையில் சர்வகலாசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் பெருவிழாவில் 200m ஓட்டத்தில் மூன்றாம் இடம் பெறுகின்றார். அடுத்தவருடம் இதே நிகழ்வில் நீளம்பாய்தல், 200m நிகழ்வுகளில் இரண்டாம் இடமும் 100m ஓட்டத்தில் மூன்றாம் இடமும் பெறுகின்றார். இதேவேளை வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் கலந்துகொண்ட இவர், 200m ஐ 27.1 செக்கனில் ஓடியும், நீளம் பாய்தலில் 5.27 மீற்றரைக் கடந்தும் முதலிடம் பெற்று, முன்னைய சாதனையை முறியடிக்கிறார். 400 மீற்றர் ஓட்டத்திலும் முதலிடம் பெறுகிறார்.

இவரது சாதனைப் பட்டியல்கள் இவரது திடமான வளர்ச்சிப் போக்கினைக் காட்டி நிற்கின்றன. இருந்தும் கூட தென்பகுதி வீரர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளும் வசதிகளும் இவருக்கு இல்லை என்பது துலாம்பரமான உண்மை. உங்களை வளர்த்துக் கொள்ளத் தடையாக உள்ளவை எவை என்றால், ஒரு பட்டியலே போடுகிறார். தடகள வீரர்களுக்கான பொருத்தமான உயர்தர உணவுத் தேவைகள் உள்ளன. இது மிகுந்த திட்டமிட்டவகையில் அமைய வேண்டும். அனுசரணையாளர்கள் இன்றி இது சாத்தியமாகாது.



மேலும் இங்கு சிறந்த பயிற்சிகள் பெற ஏற்ற மைதானங்கள் இல்லை. இருக்கும் மைதானங்களிலும் பயிற்சிகள் பெற சிறிய தடைகள். மேலும் தொடர் பயிற்சிக்கான **GYM** வசதிகள் இங்கில்லை. போட்டிகளில் கலந்து கொள்ள தென்பகுதிக்கு அடிக்கடி சென்று வரவேண்டும். அதற்கான பொருளாதாரவசதி, பாதுகாப்பான தங்குமிட வசதி என்பன மிகுந்த இடர்பாடான விடயங்களாகவே இருக்கின்றன என்கிறார். இவற்றை அனுசரணையாளர்களால் மட்டுமே நிவர்த்தி செய்ய முடியும் என்பவர், கொழும்பில் நடைபெற்ற ஆசிய சம்பியன்ஷிப் போட்டிகளின் தெரிவுப் போட்டிக்குச் செல்வதற்கு உதவியவர்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். இது தொடர்பில் சகல முன்னோடி நடவடிக்கைகளுக்கும் உதவியாக இருந்தவர் எதிர்வீரசிங்கம் என்று கூறும் இவர், மற்றும் உதவிகள் புரிந்த செல்விராதை அருளம்பலம், பயிற்றுநர் ரமணன், கிராஸ் ஹொப்பர், **KKS** யுனைட்டட் கழகங்களை மதிப்புடன் நினைவு கூருகிறார். இலங்கை உதைபந்தாட்டச்சபை உப தலைவரும், **FIFA, AFC** போன்றவற்றில் அங்கம் வகிப்பவருமான ஆனந்தராஜா தனக்குச் செய்த உதவிகளையும், தன் விளையாட்டுத்துறை வளர்ச்சியில் அவர் காட்டும் ஆர்வமும், வழிகாட்டுதல்களும் மிக நிறைவாக மனங்கொள்ளத்தக்கன என்கிறார்.

தொடர்ந்து கருத்துக்கூறும் அவர், **SLAAA** அமைப்பின் அதிகாரிகளுடன் உரையாடியபோது பயிற்சி வசதிகள், உபகரணங்கள் போன்ற பல்வேறு வசதிகளை அவர்கள் செய்து தரத் தயாராக இருப்பதாகத் தெரிவிப்பதாயும் அவை பெறப்பட வேண்டுமாயின் சரியான முன் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என்றும் கருதுகின்றார்.

- நிர்மலன் -
உதவி:- கௌரிதாசன்

குடாநாட்டுக்குள் அடைபட்டிருந்த காலத்தில் எம் சிந்தனை எம்மைப்பற்றி அளவிடல் என்பன மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்தன. ஆனால் ஏ-9 பாதை திறந்தபின் தான், எம்மைவிட எவ்வளவு தரம் கூடியவர்கள் இருக்கிறார்கள். எத்தகைய வசதி வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையெல்லாம் புரிந்துகொண்டேன் என்பவர் - ஏனைய விளையாட்டுகளுடன் ஒப்பிடும்போது தடகளப் போட்டிகளுக்கான ஆதரவு குறைவாக இருப்பதுபற்றி ஆதங்கப்படுகிறார்.

தன் வளர்ச்சிக்குக் காரணமானவர்களாக - பெற்றோர், ரமணன் மற்றும் நண்பர்களைக் குறிப்பிடும் மிதிலா, ஒரு கலைப்பட்டதாரி. இவர் தன் விளையாட்டுத் துறையை நசிந்து போகச் செய்யும் வகையில் தொழில் வாய்ப்பு வருமாயின் அதனை ஏற்கத் தயங்குவேன் என்கிறார். நடனம் மற்றும் நாடகத்துறைகளில் நாட்டம் கொண்டுள்ள இவரின் இலட்சியம், எதிர்வரும் ஐந்து வருடங்களில் ஏதாவது ஒரு சர்வதேசப் போட்டியில் கலந்துகொண்டு பதக்கம் பெறவேண்டுமென்பதேயாகும். அமைதியாகவே இளைய தலைமுறையினருக்குப் பயிற்சிகள் அளித்துவரும் மிதிலா, நிறையவே விளையாட்டுத்துறையில் செய்வேன், ஆனால், அதற்கான வசதிகள் வாய்ப்புகள் எவ்வாறு கிடைக்கும் - என்று ஏங்குவதைப் புரிந்து கொள்ள முடிகிறது. உள்ளார்ந்த திறமை நிறையக் கொண்டிருக்கும் மிதிலாவிற்கு, தான் தென்னிலங்கையில் வளர்ந்துவரும் பல வீராங்கனைகளுடன் சமதையாக ஓடமுடிவது பெரும் தன்னம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது. எமது மண்ணில் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் மிதிலா. இவரது சாதனை எம் மண்ணின் சாதனை. அதனை நிறைவேற்றித் தரும் சகல தகுதிகளும் கொண்டவர். அவர், விளைதிறன்கொண்டவித்தாகும், அதனை வளர்க்கப் பக்கத்துணையாக எத்தனையோ காரணிகள் அமையவேண்டும். மிதிலாவுக்குத் தேவை அவருக்குப் பக்கபலம். இந்தப் பலம் வருமாயின் அவர் எதிர்பார்க்கும் வசதிகள், வாய்ப்புகள், பயிற்சிகள் எல்லாமே வந்ததற்குச் சரி. இவற்றை எமது சமூகம் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும் என்பதே விளையாட்டுத்துறை ஆர்வலர்களின் விருப்பமாகும்.

# மக்ராவின் மறுபக்கம்....



கிளென் மக்ரா இன்றைய கிரிக்கெட் உலகின் அதி அற்புதப் பந்து வீச்சாளர். பாகிஸ்தான் - அவுஸ்திரேலியாவிற்கிடையே மூன்று டெஸ்ட் போட்டிகளுடன், நானூறு விக்கெட்டுகளை டெஸ்ட் ஆட்டங்களில் மொத்தமாகச் சாய்த்த பெருமை பெறுபவர். ஷேன் வோர்ண் 477 விக்கெட்டுகள் சரிக்க, மக்ரா 400 விக்கெட்டுக்கள் வீழ்த்தி டெஸ்ட் வரலாற்றில் சாதனை படைத்திருப்பவர். இவர் அவுஸ்ரேலிய வீரர்களின் இரண்டாமிடம். இருந்தும் இவர் மீது சில குற்றச்சாட்டுக்கள். மைதானத்தில் ஆக்ரோஷம், எதிரணியைத் துச்சமாக மதித்தல், அரைகுறை **Bouncer** பந்து வீச்சில் விக்கெட்டுகளை வீழ்த்துதல், தற்போது இங்கிலாந்து அணியை "அது ஒரு பொருட்டேயல்ல" என்ற பாணியில் கருத்துக்கள் தெரிவித்தல்.... இப்படியே தொடர்கிறது. அப்படியாயின் இவர் தான் மக்ராவா? "திமிர் பிடித்த மனிதன்" என்றழைக்கப்படும் இவரை இப்படியேதான் அடையாளம் காணமுடியுமா?

இவருடைய வேறொரு முகம் இருக்கிறது. அதி உயர் வெப்பம் கொண்ட சார்ஜாவில் விளையாடிய இரண்டு டெஸ்ட் உட்பட மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் 14 விக்கெட்டுகள் சரித்த இவர், அந்தக் கடும் வெப்பம் பற்றி நிரம்பவே சலித்துக் கொள்கின்றார். மேலும் விரல் விட்டு எண்ணக்கூடிய ரசிகர்கள் மத்தியில்தானே நான் 400 விக்கெட்டுகள் சாய்த்தேன். இதுவே எனது சொந்த மைதானமாக இருந்திருந்தால்..... என்று ஆதங்கப்படுகிறார். உண்மை தானே.

- பிரகாசன் -



(6ஆம் பக்கம் பார்க்க)

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# வாசித்தபின் வருக! வருக!!

**பு**திதாக வரும் உலகக்கிண்ணக் கிரிக்கட் போட்டி தொடர்பான செய்திகள் சில வெறுப்பேற்றுவனவாக இருக்கின்றன. தென் ஆபிரிக்காவில் இருந்து வரும் செய்தியொன்று நேரடியாகப் போட்டிகளைப் பார்க்கும் ரசிகர்களைப் பெரிதும் கட்டுப்படுத்தப் போகின்றது. மரியான் மேர்டென் தன் கட்டுரையை இவ்வாறு ஆரம்பிக்கின்றார். "உலகக்கிண்ணக் கிரிக்கெட் ரசிகர்களே எச்சரிக்கை! நீங்கள் மைதானத்தின் விளம்பரத்துக்கு அனுமதிக்கப் படாத வேறு குளிர்பான நிறுவனத்தின் சின்னம் கொண்ட ரீ ஷேர்ட் அணிந்திருந்தால், அதை அவதானிக்கும் ரெலிவிஷன்கள் உங்களைக் கண்டுபிடித்தால், கிரிமினல் நீதிமன்றம் உங்களைத் தண்டிக்கும்" என்கிறார் அவர்.

அப்படியானால் நேரடியாக ஆட்டத்தைப் பார்க்கச் செல்லும் ரசிகர் ஒருவர் வீட்டிலேயே சில விடயங்களைக் கற்ற பின்பே மைதானத்துக்குச் செல்ல வேண்டும். அதில் முக்கியமாக, உத்தியோகபூர்வமாக உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஏற்பாட்டாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் எவை எனத் தெரிந்து கொள்ள வேண்டும். பெப்சி, **LG ELECTRONICS, HERO-HONDA, SAA, TOYOTA** இன்னும் சில நாம் அறியாத சின்னங்களாகப் பட்டியல் நீள்கிறது. இவற்றுக்குப் போட்டியான நிறுவனங்களின் சின்னங்கள் அணிந்து வந்தால் அவை அகற்றப்பட்ட பின்பே ரசிகர்கள் அனு மதிக்கப்படுவார் கள். அதாவது திட்டமிட்ட வகையில், மறைமுகமான அடிப்படையில், அனுமதிக்கப்பட்ட ஒரு பொருளுக்குப் போட்டியாக இன்னொன்றை காட்சிப்படுத்தல் தடைசெய்யப்படுகிறது. உதாரணமாக, குறிப்பிட்ட விளம்பரம் கொண்ட ரீ ஷேட்டுடன் ஒரு ஐம்பது பேரை மைதானத்தின முன் அனுப்புதல் போன்ற விடயங்கள் அனுமதிக்கப்படமாட்டாது என்கிறார்கள் ஏற்பாட்டாளர்கள். இதேவேளை, மைதானத்துக்குள் அனுமதிக்கப்படாத பொருட்களின் பட்டியல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. போத்தல்கள், குடைகள், குறித்த சில உபகரணங்கள், வாத்தியக்கருவிகள் **(TRUMPETS)**, மேளங்கள் (DRUMS), பழைய தென் ஆபிரிக்கக் கொடிகள், பட்டாசுகள், 1மx1.5மீ அளவிற்கு மேற்பட்ட பதாகைகள் என்பன தடைக்குட் பட்வையாகும். (ரயர் எரிப்பது தடைசெய்யப்படவில்லைதானே என்று புளகாங்கிதம் அடைகிறது எங்கடை ஒண்டு). மைதானங்களின் மேலால் விமானங்கள் பறப்பதைத் தடைசெய்யும் நோக்கமும் உண்டு. விளம்பரங்களைப் பார்ப்பதை விட, சிலவேளைகளில் ரீ.வி படப்பிடிப்பாளர்கள் வளைத்துப் பிடிக்கும் ஒரு விமானம் - சிறகு விரிக்கும் ஒரு பருந்து - மைதானத்தில் பன்னிரண்டாவது வீரராகக் களமிறங்கி அங்கும் இங்கும் ஓடித்திரியும் இன்னொரு அழகிய பறவை என்பன ரசிகர்களின் கூடுதல் ஆர்வத்திற் குரியன. தென்னாபிரிக்கா இதனையும் விடாதோ?

– நிர்மலன் –

ஒரு ரசிகர், தான் எந்தமாதிரி நல்மாணாக்கனாக மைதானத்திற்குள் நுழைய வேண்டும் என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது. அதிலொன்றும் சங்கடம் இல்லை. அறிவுறுத்தல்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட விடயங்கள் தொடர்பான விபரங்கள் எல்லாம் உங்கள் அனுமதிச்சீட்டில் பிரசுரிக்கப் பட்டிருக்கும். அவற்றை அவதானமாக வாசித்துக்கொள்ள வேண்டும். (இங்குள்ளவர் களுக்குப் பிழை பிழையாகத் தமிழில் எழுதப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பன வாசிப்பதில் நல்ல அனுபவம் உண்டென்கிறார் அனுபவஸ்தர் ஒருவர்). பின்னர் என்ன மாதிரி ரீ ஷேர்ட் போடலாம், மைதானத்துக்கு



வாத்தியக்கருவிகள் இன்றி என்ன மாதிரி பாடல்கள் இசைத்து கலகலப்பாக இருக்கலாம் (வெற்று பரல்கள் மைதானத்தில் இருக்குமோ?) என்பது பற்றியெல்லாம் தீர்க்கமான முடிவுகள் கண்டபின்பே மைதானத்துக்குப் போவது பற்றி யோசிக்க வேண்டும். இதெல்லாம் ரசிகர்களுக்கு வெறுப்பேற்றுமோ இல்லையோ? நினையாப்பிரகாரம் நடக்கும் அற்பத் தவறுகளுக்கு மைதானத்தை விட்டு வெளியேற்றினால் அது பாவமாகாதா?

இன்றைய நிலையில் அதிதீவிரச் செயற்பாடுகள் பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வரும் என்பதால் அதற்கான நடவடிக்கைகள் அவசியமே. அவை இரண்டு வருட சிறைத்தண்டனை வரை செல்லும். இருந்தும், தாம் அறியாமலே அற்ப விடயங்களுக்கு அவதானிக்கப்படுவதும், எச்சரிக்கப்படுவதும் அசிங்கமாகத் தோன்றவில்லையா?

இதெல்லாம் ஒருபுறம் இருக்க, உலகின் பெரிய வர்த்தக நிறுவனங்கள், மாறி மாறி உலகின் கிரிக்கெட் சபைகளை மற்றும் ஐ.சி.சியை குத்தகைக்கு எடுக்கும் நிலை வளர்ந்துவருவது போலத் தெரிகின்றதே. காலப்போக்கில், சில வர்த்தகக் கம்பனிகளின் விளம்பர ஏஜென்டுகளாக கிரிக்கெட் சபைகள் மாறிவிடுமோ என்று எண்ணுவதை தவிர்க்க முடியவில்லை. இப்படியே போனால் - காலப்போக்கில் ஐ.சி.சி. மற்றும் கிரிக்கெட் சபைகள் தம் குடும்பியை, யார் யாருடையவோ கைகளில் கொடுத்துவிட்டு, அவர்களுக்குப் பணம் பண்ணிக் கொடுக்கும் கொமிஷன் ஏஜண்டுகளாகத்தான் கிரிக்கெட் ரசிகர்களால் பார்க்கப்படுவார்கள்.

## மக்ராவின்......

உலகின் சிறந்த டெஸ்ட் மற்றும் ஒரு நாள் பந்து வீச்சாளன் என்று பிரகடனப்படுத்தப்பட்டபோது "இது மிகவும் கடுமையானது" என்று ஏனைய பந்து வீச்சாளர்களைப் பாராட்டுகிறார்.

மேலும் கூறுகிறார் "எனது கதாநாயகன் டெனிஸ் லிலி மற்றும் 80 களில் இருந்த மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சாளர்களுடன் (அன்டி றொபட்ஸ் முதல் காலஞ்சென்ற மல்கம் மார்ஷல் வரை அடங்குவார்கள்) ஒப்பிடுகையில் அந்தத் தரம் என்னிடம் இல்லை" என்கிறார். "உலக சாதனையாளன் கோட்னி வோல்ஸின் (519 விக்கெட்டுகள்) சாதனை இலக்கு எனக்குண்டு, ஆனால் படிப்படியாகத்தான், முதலில் 450ஐ இலக்காகக் கொள்வோம்" என்கிறார். "ஒரு சந்தர்ப்பம் வரும்போது 519 இலக்கை இலக்கு வைப்பேன், ஆனால் அதற்கிடையில் ஷேன் வோர்னும், முரளியும் அதனைத் தாண்டிவிடுவார்கள், இன்னும் ஒரு படி மேல் சென்று இறுதியில் முரளிதான் அதிகூடிய விக்கெட்டுகள் சாய்த்தவர் என்ற பெருமையைப் பெறுவார், ஏனெனில் அவர் இளையவர், அதோடு 70 டெஸ்ட் ஆட்டங்களில் மட்டும் 430 விக்கெட்டுக்களைச் சாய்த்தவர் அவர்" என்று முரளியின் புகழ்பாடுகின்றார். நல்லதொரு அறிவுரையை வேகப் பந்துவீச்சாளர்களுக்குக் கூறுகிறார். "நீங்கள் திறமையாகப் பந்துவீச வேண்டுமாயின் விக்கெட் காப்பாளர், சிலிப் ஆட்டக்காரரின் அறிவுரைகளைக் கேளுங்கள்" என்கிறார். வசதி கிடைக்கும்போது மைக்கல் ஹோல்டிங், இயன் பொத்தம் இருவரினதும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்கிறேன் என்கிறார். "நான் எந்த ஒரு எதிரணியையும் பலவீனமானதாக எண்ணுவதேயில்லை. அந்த நிமிடத்தில் நாங்களே பலம் நிறைந்தவர்கள் என்று மட்டும் எண்ணுவேன்" என்கிறார்.

தனது குடும்பம் பற்றியும் அவர் கருத்துக் கூறத் தவறவில்லை. "முன்பெல்லாம் நீண்டகாலம் வீட்டைப் பிரிந்திருப்பதைப் பற்றி நான் கவலை கொள்வதில்லை. ஆனால் இப்பொழுது அது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. எனக்கு இரண்டு சின்னஞ்சிறு குழந்தைச் செல்வங்கள் இருக்கிறார்கள். அவர்களின் எண்ணம் என்னை வருத்துகிறது. சார்ஜாவில் இரண்டு நாள் முன்னதாகவே ஆட்டம் முடிந்ததும் எதிர்பாராது விரைவிலேயே என் பிள்ளைகளைப் பார்க்கப்போகிறோம் என்ற ஆனந்தம் என்னுள் பொங்கியது" என்னும் கிளென் மக்ராவின் சாதனை வெறும் இறுதி எண்ணிக்கையை மட்டும் கொண்டதல்ல. இவர் சாய்த்த விக்கெட்டுகளில் 266, முதல் ஆறு துடுப்பாட்ட வீரர்களினதாகும். அதுவும் 107 ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்தியிருக்கின்றார். தற்போதைய ஆஷெஸ் தொடர் போகிற போக்கைப் பார்த்தால் முரளியின் 430 விக்கெட்டுக்களுக்கும் வசீம் அக்ரத்தின் 414 விக்கெட்டுக்களுக்கும் இடையில் வந்து உலகின் ஆறாவது இடத்தில் நிற்பார் போலத் தெரிகின்றது.

ஆடுகளத்தில் ஒரு அணியாக நின்றாடும்போது நாம் காணும் மக்ராவுக்கும், ஒரு தனிமனிதனாக, சாதாரண ஆசாபாசங்கள், இயல்பூக்கமான நற்பண்புகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்த மனிதனாக நாம் காணும் மக்ராவுக்கும் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றனவே. அவருடைய இந்த உள்ளார்ந்த பண்புகள், இவரை மென்மேலும் சாதனை வீரனாக்கும் என்பதில் ரசிகர்களுக்கு ஒரு விருப்பம் இருக்குமல்லவா.

# ஆக்கிரமிப்பை ஆக்கிரமிக்கலாமே!

இலங்கை கிரிக்கெட் அணியின் தாழ்நிலை தொடர்பாகப் பல திசைகளிலும் கருத்துக்கள் வெளிவந்துகொண்டிருக்கும் நேரம் இது. சிலர் மேலோட்டமான கருத்துக்களை முன்வைக்கையில், சிலர் ஒட்டுமொத்தமான இலங்கைத் தீவின் பிரதிநிதிகளாக இலங்கை அணியைப் பார்த்து, அணியின் வெற்றி, தோல்விகள் எவ்வாறு நாட்டைப் பிரதிபலிக்கின்றன என்றும் ஆராய்கிறார்கள். இதேவேளை - இலங்கை அணியின் தொடர் தோல்விகளுக்கு, இலங்கை அணியினரின் உளவியல் ரீதியான தாக்கங்களும் காரணமென எடுத்துக் காட்டும் அதேவேளை, மனோபலம் குறைவதும கட்டுப்பாடு குறைவாக உள்ளமையும் காரணங்கள் என்றும் சிலர் சொல்கின்றார்கள். மேலும் ஒரு சர்வதேசத் தரம் வாய்ந்த அணி - தொடர்ந்தும் புதிய சூழ்நிலைகள், வித்தியாசமான மைதானங்கள், வாய்ப்புக் குறைந்த தளங்கள் என்று நொண்டிச் சாட்டுக் கூறிக் கொண்டேயிருப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாதென்கிறார்கள்.



இலங்கை அணியின் உளவில் ரீதியான பாதிப்புக்கள் பற்றிக் குறிப்பிடும்போது, வேறு நாடுகளில், குறிப்பாக இடைவெப்ப வலய நாடுகளில் விளையாடும்போது, அதன் தாக்கம் கூடுதலாக இருக்கின்றது என்று எடுத்துக் காட்டுகிறார்கள். இதன் தொடர்பில் கருத்துக் கூறும்போது, இலங்கை அணி வீரர்கள் வேறு நாடுகளில் மொழிரீதியாக எதிர்கொள்ளும் இடர்பாடுகள் பற்றியும் எடுத்துக்கூறப்படுகிறது. ஒரு கிரிக்கெட் ஆர்வலர் கருத்துக் கூறும்போது, இலங்கை வீரர்களின் ஆங்கிலப் புலமை குறைவானது. அவர்களுக்குப் பெரும் உளத்தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும், அது விளையாட்டில் பிரதிபலிப்பதாகவும் தெரிவிக்கின்றார். இரண்டு மூன்று மாதங்கள் இங்கிலாந்திலோ, அவுஸ்திரேலியாவிலோ, நியூசிலாந்திலேயோ அல்லது தென்னாபிரிக்காவிலோ மற்றும் ஆங்கிலத்தைப் பொது மொழியாகக் கொண்ட நாடுகளிலோ சுற்றுப் பயணம் செய்யும்போது, தொடர்பாடல் மிகவும் கட்டுப்படுத்தப்படுவதும், தமக்குத்தாமே தம்முள் குறுகிக்கொள்வதும் இயல்பாக நடைபெறுவது தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது. இலங்கையில் இருந்து வெளிநாடுகளில் குடியேறியவர்கள் கூட, இலங்கை அணி வீரர்களுடன் தாய்மொழிவிட்டு ஆங்கிலத்தில் உரையாடும்போது மனக்கூச்சமாக இருப்பதும் என்னவோ உண்மைதான். ஆனால், இது வீரர்களின் குறைபாடும் அல்ல. கூச்சப்படும் விடயம் ஒன்றுமல்ல. ஏனெனில், இலங்கையில் தாய்மொழி மூலமான கல்வி முதன்மைப்பட்டிருப்பதும் ஆங்கிலத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டும்கூட அதன் தரம் படிப்படியாக வீழ்ச்சியுறுவதும் யதார்த்தமானது. மேலும் கிரிக்கெட் உலகில் ஆங்கிலம் ஆக்கிரமிப்பு மொழியாக இனங்காணப்பட்டுள்ளதும் ஒன்றும் புதிதல்ல.

இன்னொரு வகையில் பார்க்கும்போது, ஆட்டங்கள் முடிவடைந்ததும், நடைபெறும் நிகழ்வுகள் முற்றுமுழுதாக ஆங்கிலத்திலேயே நடைபெறுவது எந்தளவுக்குச் சரி என்ற வினா எழுதல் நியாயமானதே. ஏனெனில் இலங்கை, பங்காளதேஷ், இந்தியா, பாகிஸ்தான் முதலிய நாடுகளில் தாய்மொழி ஆங்கிலம் அல்லவே. அவ்வகையில் ஊமைப்படம் பார்த்த நிகழ்வாக பரிசளிப்பு நிகழ்வுகள் நடைபெற்று முடிவடைவதே வழக்கமாக இருக்கின்றது. மேலும், இந்தியாவில் ஆங்கில மொழிமூலக் கல்வியின் பெறுபேறு கூடுதலான வீரர்களிடம் காணப்பட்டாலும் கூட, சில வீரர்கள் பதில் அளிக்கச் சங்கடப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதுவும் எத்தனை மாநிலங்கள் எத்தனை மொழிகள். ரவி சாஸ்திரி, டோணி கிரெய்க் போன்றவர்களை அடிக்கடி பரிசளிப்பு நிகழ்வுகளில் காண்கிறோம். அண்மையில் நடைபெற்று முடிவடைந்த இந்திய - மேற்கிந்திய ஒரு நாள் போட்டி ஒன்றில், ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட வீரேந்திர சேவாக் - ரவி சாஸ்திரி ஆங்கிலத்தில் வினாக்களைத் தொடங்க, அவர் ஹிந்திமொழியில் பதில் அளித்துப் பின்னர், ஆங்கிலத்தில் பதிலளித்துச் சென்றார். பலர் தம் எண்ணக் கிடக்கைகளைத் தாய் மொழியில் கூற, கூட நிற்பவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கலாம். இது ஒரு சில நிமிட விடயங்கள்தானே. மேடைப் பேச்சு நிகழ்ச்சி அல்லவே. இதனால் ஒரு கிரிக்கெட் வீரர் தனக்கு ஆங்கிலம் தெரியவில்லையே என்று மனக்குழப்பம் அடைய வேண்டிய தேவை ஏற்படாது. இந்தியாவில், இலங்கையில் நேர்முக வர்ணனைகள் ஹிந்தி, சிங்கள மொழிகளிலும் பாதிக்குப் பாதி வேளை நடாத்தப்படுகின்றன. இது ரசிகர்களுக்கு ஓரளவில் ஆறுதல்தான். (எங்களுக்கு...?) ஆனால், சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் எல்லோருக்கும் சரளமாக ஆங்கிலம் பேசத் தெரியும் என்ற கோதாவில் ரவி சாஸ்திரி, டோணி கிரெய்க் போன்றவர்கள் செயற்படுவதுதான் புரிந்துகொள்ள முடியாததாக இருக்கின்றது.

எனவே, சர்வதேசக் கிரிக்கெட்டில் எவ்வளவோ மாற்றங்களைப் புகுத்தியவர்கள், கிரிக்கெட் வீரர்கள் சங்கடப்படாத வகையிலும் சில ஏற்பாடுகளைச் செய்ய முனைதல் நல்லதாகவே இருக்கும். பொருத்தமான வகையில் மொழிகளின் பிரயோகத்தை ஏற்படுத்துவதன்மூலம் இதனைச் செய்யலாம். ஆங்கிலம் பிரதானமான ஊடக மொழியாக இருக்கலாம். இலங்கை வீரர்களைப் பொறுத்தவரையில், ஆங்கில மொழிப்புலமை குறைவாக இருந்த பல வீரர்கள் தற்போது நன்றாகவே ஆங்கிலம் பேசுவ்தாகச் சுட்டிக்காட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலமொழிப் பிரச்சினை தொடர்பாகப் பல வீரர்கள் மனம் நொந்து போகும் நிலையில், எதிர்ப்பக்கத்தில் இருந்து மாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதைவிட, தம்மைத்தாமே வளம்படுத்திக் கொள்வது பொருத்தமாக இருக்கும் போலத் தெரிகின்றது. ஆங்கிலத்தைக் கற்பதால் குறையொன்றும் வரப் போவதில்லை. அது அவர்களின் மனோபலத்தைத்தான் அதிகரிக்கும். இன்னும் கூறப்போயின் எதிர்கால இலட்சியங்களை உயர்வாக வைத்திருப்பவர்கள் ஆங்கிலத்துக்கும் முக்கியத்துவம் கொடுப்பது அவர்களுக்கு உதவியாகவே இருக்கும்.

– நிமலா –

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## பாரபட்சமே நிர்ப்பந்தித்தது!

தமிழர் தாயகப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாக அமைப்புக்கள் பற்றிய சூடான விவாதம் நாடாளுமன்றிலும் தெற்கின் அரசியல் மேடைகளிலும் நடைபெற்று வருகின்றது.

தமிழீழ நீதிமன்றங்களும், தமிழீழக் காவல்துறையும் அமைக்கப்பட்டு பல்லாண்டுகள் கடந்த நிலையில் - இருந்தாற்போல, தடீரென எழுந்துவரும இந்த எதிர்ப்புக் குரல்களின் உண்மையான நோக்கம் என்னவென்பது ஒருபுறமிருக்க -

தமிழர் தாயகப் பகுதிகளில் தனியான நீதி நிர்வாக அமைப்பை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏன் எழுந்தது என்று ஆராய்வது முக்கியமானதாகும்.

பிரித்தானியர் இலங்கைத் தீவை விட்டு வெளியேறிச் சென்றதன் பின்னராக அமைக்கப்பட்ட - நீதி நிர்வாக முறைமை என்பது முற்றுமுழுதாக சிங்களவர்களை மையமாகக் கொண்டதாகவே அமைந்திருந்தது.

தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதிய சிங்கள அரசாங்கங்களதும், தலைவர்களினதும் போக்குக்கு எந்தவிதத்திலும் மாற்றுக்குறையாத வகையிலேயே - நீதித்துறையும் இயங்கியது.

நாடாளுமன்றங்கள் உருவாக்கிய பாரபட்சமான, இன ஒடுக்குமுறையை நோக்காகக் கொண்ட சட்டங்கள், தமிழினத்தைப் பழிவாங்கவும் தொடங்கின.

சிங்கள மொழியைக் கற்றாலே பதவியில் நிலைத்திருக்கலாம், இந்திய வம்சாவழியினரை நாடற்றவராக்கிய சட்டம், வாகன இலக்கத்தகடுகளில் சிங்கள 'ஶ்ரீ' எழுத்தின் பலவந்தமான இடம்பிடிப்பு என - தமிழர்களின் மீதான அடக்கு முறைக்கு சட்டங்களும் நீதித்துறையும் காலங்காலமாக உதவியே வந்தன.

இதனால் - இலங்கையின் நீதித்துறை மீது நம்பிக்கை இழந்த தமிழர்கள் - அது சிங்கள மக்களுக்கு மட்டுமானதே என்று எண்ணவும் தலைப்பட்டனர்.

இதன்மேல் - அரச படைகளின் வன்கொடுமைகளும், இனவன்செயல்களும் - அவற்றுக்கெதிராகத் தமிழர்கள் நீதிமன்றங்களை நாடியபோதும் அதற்கு நியாயம் கிடைக்காமற் போனதும் - தமிழர்களை மென்மேலும் விரக்தியும் சலிப்புமுறச் செய்தன.

1983 களிற்குப் பின்னர் - தமிழர்களுக்கெதிரான இனப்போர் தீவிரமடைந்தபோது, நீதி நிர்வாகத்தை வழிநடத்தியிருக்க வேண்டிய அரச படைகள் - தமிழர்களைக் கொன்றொழிக்கும் படைகளாகவே மாறின.

இராணுவமோ, கடற்படையோ, விமானப்படையோ, பொலிஸாரோ - தமிழர்களின் விரோதிகளாகவே செயற்பட்டனர்.

திட்டமிட்டுக் கட்டவிழ்த்துவிடப்பட்ட அரச பயங்கரவாதத்தை செவ்வனே செய்து வருபவர்களாக நீதியின் காவலர்கள் மாறினர். அவர்களுக்குப் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற சட்டங்கள் பேருதவியளித்தன/அளித்துவருகின்றன.

கண்மூடித்தனமான கைதுகளும், சித்திரவதைகளும், பாலியல் வன்முறைகளும், சொத்துக்கள் அழிப்பும் - எதிரி நாடொன்றின் படையெடுப்பைவிட மிகக் கொடூரமாக, மனிதாபிமானம் என்ற பேச்சுக்கே இடமளிக்காதவகையில், நியாயமும் நீதியும் கிஞ்சித்தேனும் கருத்திலெடுக்கப்படாத வகையில் தமிழ் மக்கள் மீது நடந்தேறின.

இவ்வளவுக்கும் பின்னரே, தமிழர் பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கவும்- தமிழர்களுக்கான நீதி நிர்வாகத்தை ஏற்படுத்தவுமே தமிழீழக் காவல்துறையும் நீதிமன்றங்களும் தோன்றின.

எவ்வாறு ஆயுதமேந்திப் போராடுவதற்குத் தமிழினம் நிர்ப்பந்திக்கப்பட்டதோ, அவ்வாறே தமக்கான நீதி நிர்வாகத்தையும் ஏற்படுத்திக் கொள்ளும் நிர்ப்பந்தத்தையும் சிங்கள அரசாங்கங்களும் சிங்களத் தலைவர்களுமே ஏற்படுத்தினர்.

தனது தந்தை கொண்டு வந்த தமிழர் விரோதச் சட்டங்களும், அவை தமிழர்களைப் பழிவாங்கியதுமே நாட்டின் நீதித்துறையின் மீது தமிழர்கள் நம்பிக்கை இழப்பதற்கு முக்கிய காரணிகளில் ஒன்றாக அமைந்தது என்பதை மறந்தவராக இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செயற்படுகின்றார்.

இன்றும் நீதியின், நியாயத்தின் அடிப்படையில் தமிழர் பகுதிகளில் சட்டம், ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படுவது - தமிழீழக் காவல்துறையாலும், தமிழீழ நீதிமன்றங்களாலுமே என்பதைத் தெரிந்தும் தெரியாதவராக அவர் பேசிக்கொள்வதும், விசாரணைக்கு உத்தரவிடுவதும், அவற்றை ஒழிக்கப் போவதாக பிரகடனங்கள் செய்வதும் தெளிவான இனவாதப் போக்கிற்குரியவராகவே அவரைக் காட்டுகின்றது.

தமிழர் பகுதிகளிலுள்ள விடுதலைப்புலிகளின் நிர்வாக முறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்படுகின்ற காலம் கனிந்து வருகையில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அறிவிப்பு, வீணான குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்குடனும், தெற்கில் சமாதானத்திற்கு எதிரான உணர்வலைகளைத் தூண்டுவதாகவுமே அமைந்துள்ளது.

# காணாமற்போனோர் குறித்து விசாரிக்க முன்னாள் அரச அதிபர் தலைமையில் குழு

### -இம்மாதம் 16 ஆம் திகதி முதல் செயற்படும்-

யாழ்ப்பாணத்தில் படையினரால் கைதாகி காணாமல் போனோர் பற்றிய முறைப்பாடுகளை விசாரிக்க முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்வுள்ளது. இக்குழு டிசம்பர் 16ஆம் திகதி முதல் செயற்படத் தொடங்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட மனித் உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் குழுவினர், நேற்றுக் காலை 11 மணியளவில் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தலைவர் செல்வராஜாவும் மற்றும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கும்போது - மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் விசாரணைகளை மட்டும் மேற்கொண்டு உண்மை நிலையை உரிய தரப்பினருக்கும் அரசிற்கும் அறிவிப்பார்கள். இதுதான் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணி. தண்டனைகளையோ, தீர்ப்புக்களையோ நாம் விதிக்க மாட்டோம். அத்துடன் தண்டப் பணம் எதுவும் நாம் அறவிடவும் மாட்டோம் என தெரிவித்ததுடன்,

இவ்வளவு காலமும் விசாரணைகள் மேற்கொள்ளப் படாமைக்கு நிதிப் பிரச்சினையே காரணமாக இருந்தது. இப்போது தனிப்பட்ட ரீதியில் எமக்கு நிதி கிடைத்துள்ளது. இதைக் கொண்டுதான் நாம் எதிர்காலத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளோம். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ்ப்பாணத்திற்கென புதிய திட்டம் ஒன்றைக் கொண்டுவர தீர்மானித்துள்ளோம். அதாவது யாழ். அலுவலகத்திற்கு புதிய பணியாளர்களை நியமிப்பதுடன் அனைத்துப் பணியாளர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இதன் மூலம் யாழில் எமது நடவடிக்கைகளை திறம்படவும், விரைவாகவும் செய்ய முடியும்.

யாழ்ப்பாணத்திற்கென ஐந்து பேர் கொண்ட பிராந்தியக் குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்காக மக்களிடம் செல்வாக்குப் பெற்ற, நடுநிலைமையுடன் செயற்படக் கூடியவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

காணாமற் போனோர் சம்பந்தமான விசாரணைகளை மேற கொள்வதற்கு முதல் இச்சம்பவங்களுடன் தொடர்புடைய சான்றுகள், கடிதங்கள், புகைப்படங்கள், தடயங்கள் என அனைத்தையும் சேகரித்து அவற்றை பாதுகாப்பதுடன் இவற்றின் மூலமும் விசாரணைகள் மேற்கொள்ள முயற்சி எடுக்கப்படும். அத்துடன் காணாமல் போனோர் சம்பந்தமான முறைப்பாடுகள் அனைத்தும், சம்பவம் நடந்த விதம், சம்பவம் நடந்த காலம், சம்பவம் நிகழ்ந்த இடம் இவை போன்ற பல காரணிகள் அடிப்படையாக தரம்பிரிக்கப்படவுள்ளன. இதன் மூலம் குழுவாக விசாரணைகளை மேற்கொண்டு துரிதகதியில் இம்முறைப் பாடுகள் சம்பந்தமான விசாரணைகளை நிறைவு செய்ய முயற்சி எடுக்கப்படும் எனவும் நேற்றைய சந்திப்பின்போது காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிகளுக்கு கொழும்பிலிருந்து யாழ் விஜயம் செய்த மேற்படி குழுவினர் தெரிவித்தனர்.

# வான்படைக்கென வாங்கப்பட்ட ஹேர்குலிஸ் விமானம் எங்கே?

### முன்னாள் விமானப்படைத் தளபதியிடம் விசாரணை

இலங்கை விமானப்படைக்கு ஹோகுலிஸ் விமானக் கொள்வனவின்போது இடம்பெற்ற ஊழல் சம்பந்தமாக முன்னாள் விமானப்படைத் தளபதி ஒலிவர் குணசிங்க அண்மையில் ரகசியப பொலிசாரால் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

இந்த விமானம் 150 கோடி ரூபாவுக்கு கொள்முதல் செய்யப்பட்டது.

1997 ஆம் ஆண்டு மூன்று ஹேர்குலிஸ் விமானங்களைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடாகியிருந்தது. இரண்டு வருடங்களில் இரண்டு ஹேர்குலிஸ் விமானங்கள் இலங்கைக்கு எடுத்து வரப்பட்டன. ஆனால் மூன்று விமானங்களுக்குரிய பணம் செலுத்தப்பட்டது. ஆனால் மூன்றாவது விமானம் வந்து சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அரும் பொருட்களை வெளியில் கொண்டு செல்வதற்குத் தடை

### விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகம் அறிவிப்பு

அரும்பொருட்களை இந்த நிலத்திலிருந்து இழப்பது போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் ஒன்றென்பதால் - இவற்றை வெளியில் எடுத்துச் செல்வதையும், வெளியாருக்கு விற்பனை செய்வதையும் விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் தடைசெய்வதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக, கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஒரு இனத்தின் தனித்துவம், அதன் மரபுவழியான தாயக நிலப்பரப்பு, சுய நிர்ணய உரிமை ஆகியவற்றை நிரூபிப்பதில் அவ்வினத்தின் பண்பாடும் வரலாறும் தலையாய இடத்தை வகிக்கின்றன. ஒரு குறித்த இடத்தில், ஒரு குறித்த காலத்தில் ஓரினம் வாழ்வதன் மூலம் உருவாக்கப்பட்டனவே பண்பாடு ஆகும். இப்பண்பாட்டில் அவ்வினம் காலங்காலமாக உருவாக்கிய மரபுகளினதும், பெறுமானங்களினதும், நம்பிக்கைகளினதும் தொழில் நுட்ப ஆற்றல்களினதும் வெளிப்பாடுகளாக அரும் பொருட்கள் அமைகின்றன.

இன்றைய எமது சூழலில் வழிபாட்டிடங்கள் சார்ந்த, வீடு சார்ந்த, காலத்தால் முற்பட்ட அலங்கார நுணுக்கமுடைய பல அன்றாடப் பண்பாட்டுப் பொருட்கள் புழக்கத்திலிருந்து வழக்கொழிந்து காணப்படுகின்றன. இவை, அவை எழுந்த காலத்தினது சான்றுகளாகவும், இன்றுள்ள எச்சங்களாகவும் உள்ளன. அதனால் இன்றைய பண்பாட்டிற்கு அடிப்படையாகவும் விளங்குகின்றன.

நமது முன்னோர் இந்த மண்ணில் காலங்காலமாக வாழ்ந்தார்கள் என்பதற்குச் சான்றாகவும் உலக நாகரிகத்திற்கு ஈழத் தமிழர்களின் பங்களிப்பாகவும் விளங்கும் இந்த அரும் பொருட்களைப் பாதுகாத்தல் என்பதும் அதனை அடுத்த சந்ததிக்கு வழங்குதல் என்பதும் இன்று நமக்குள்ள பாரிய பொறுப்பும், கடமையும் ஆகும்.

வழிபாட்டிடம் சார்ந்த உருவச்சிலைகள், சடங்குப் பொருட்கள், வாகனங்கள், பழமையான வீடுகளின் நிலைகள், கதவுகள், பழைய தளபாடங்கள், வேலைப்பாடுடைய உலோகப்பொருட்கள், நாணயங்கள், ஓலைச்சுவடிகள், தொழில்சார் பொருட்கள் மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த அனைத்துப் பொருட்களும் அரும்பொருட்களாகும்.

எனவே நமது தேசிய கட்டுமானத்தினதும் அதன் அடையாளத்திலும், வரலாற்றிலும் பிரதான பங்கு வகிக்கும் இந்த 'அரும்' பொருட்கள் தேசியச் சொத்துக்கள் ஆகும். இவற்றை இந்த நிலத்திலிருந்து இழத்தல் என்பது எமது அடையாளத்தையும், அதை வேண்டி நிற்கும் எமது போராட்டத்தையும் வலுவிழக்கச் செய்யும் ஒன்றாகும். எனவே அவற்றை இந்த மண்ணிலிருந்து எடுத்துச் செல்வதும், எக்காரணம் கொண்டும் வெளியாருக்கு விற்பனை செய்வதும் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தால் தடை செய்யப்படுகின்றது.

பொதுமக்கள் விழிப்பாக இருந்து இத்தடையை அமுலாக்க எமக்குப் பூரண ஒத்தழைப்பு வழங்கி, இந்த அரும் பொருட்களைக் காப்பாற்றி, பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு வழங்கும் எமது பணிக்கு வலுச் சேர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'நவமணி' பத்திரிகை அலுவலகம் இனந்தெரியாதோரால் எரிப்பு!

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வெளிவரும் 'நவமணி' பத்திரிகையின் அலுவலகம் இனந்தெரியாத நபர்களால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் களுபோவில ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள 'நவமணி' அலுவலகத்துக்குள் இனந்தெரியாத ஆயுதபாணிகள் நுழைந்தனர். இவர்கள் பத்திரிகை அலுவலகத்துக்கு தீ வைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் அலுவலகத்தில் இருந்த பொருட்கள், தளபாடங்கள் எரிந்து நாசமாகிவிட்டதாகவும் பத்திரிகை ஆசிரியர் அஸ்வர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கொகுவெல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

'நவமணி' பத்திரிகை 1996 ஆம் ஆண்டு முதல் வார இதழாக வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை ஒஸ்லோவுக்குப் புறப்படுவதற்கு சற்று முன்னர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் நூர்தீன் மசூர் ஆகியோர் மேற்படி பத்திரிகை அலுவலகத்தைச் சென்று பார்வையிட்டனர். மிகவிரைவில் மீண்டும் இப்பத்திரிகையை வெளிக்கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்கள் உறுதியளித்துச் சென்றதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஒஸ்லோ பேச்சுக்கான அரசகுழு நேற்று புறப்பட்டுச் சென்றது!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக அரச தரப்புக்குழு நேற்று ஒஸ்லோவுக்குப் புறப்பட்டுச்சென்றது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் லண்டனுக்குச் செல்லும் விமானத்தில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புறப்பட்டுச் சென்றார். புலிகளுடன் பேச்சு நடத்தும் அரச தரப்புக் குழுவில் இடம் பெற்றிருக்கும் அமைச்சர் ரவுப் ஹக்கீம் மற்றும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ ஆகியோர் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஒஸ்லோவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

அமைச்சர் மிலிந்த மொரகொட இந்தியாவிலிருந்து நேரடியாக ஒஸ்லோவுக்கு புறப்படுவார் எனத் தெரியவருகிறது.

(01)

# சமாதானத் தீர்விற்கான தீவிர முயற்சிகளில் அடிபட்டுப் போகும் சிங்கள இனவாத சக்திகள்!



தெற்கில் குழப்பங்கள் விளைவிக்கும் இனவாதக் கதாநாயகர்கள்.

இலங்கை இனப்பிரச்சினை தீர்வின் ஓரம்சமான நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் ஒஸ்லோவில் மாநாடு நடந்தேறியுள்ளது. உலகளாவிய ரீதியில் 42 நாடுகள் இலங்கைக்கு நிதியுதவி மற்றும் இனப்பிரச்சினைத் தீர்விற்கான உதவிகளை வழங்கும் வகையில் ஒன்று கூடின. இவற்றில் பல நாடுகள் இலங்கையின் வேண்டுகோளை உரிய முறையில் ஏற்று, நிதியுதவியை வழங்கின. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆதரவை வெளிக்காட்டின. எனினும் அமெரிக்கா மாத்திரம் களின் ஏக பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் இனங் காணப்பட்டுள்ளனர். அதேநேரம் ஏற்கனவே இலங்கையில் பல்வேறு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு அவை நம்பிக்கையற்ற விதத்தில் முறிவடைந்தமையால் உலக நாடுகள் தமது உதவிகளை வழங்கு வதற்கு முன்னர், உறுதியான நம்பிக்கையை எதிர்பார்த்தன.

இந்த நம்பிக்கையை வெளிப்படுத்த தமிழீழ விடுதலைப்புலிகளும், அரசாங்க தரப்பும் - அபிவிருத்தியில் தமது ஒற்றுமையை

## தெற்குத் திசையினிலே.....

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

தமது மேலாதிக்கத்தை மீண்டும் ஒருமுறை வெளிக்காட்ட எத்தனித்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது நெருக்குதலை ஏற்படுத்தும் வகையில், அந்த நாட்டின் ஆசிய பிராந்திய உதவி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். எனினும் இந்த நெருக்குதல் கருத்துக்கள் ஏனைய நாடுகள் மத்தியில் பெரிதாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. டென்மார்க் உட்பட பல நாடுகள் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முந்திக்கொண்டு நிதி உதவிகளை அறிவித்தன.

இந்த மாநாட்டின்போது அமெரிக்கா வெளியிட்ட கருத்துக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், ஊடகவியலாளருக்கு வெளியிட்ட கருத்துக்கள், தென்னிலங்கை அரசியலில் சற்றுச் சலசலப்பை ஏற்படுத்தின. தமிழீழ விடுதலைப் புலிகள் பிரிவினையை விலக்கிக்கொள்ளப்போவதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான மேற்குலகின் தடைகளை விலகிக்கொள்ளவும் அவர்களுக்குச் சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுக்கொடுக்கவுமே "ஒஸ்லோ" மாநாடு உதவியிருக்கிறது எனத் தென்னிலங்கை அரசியல் சக்திகளான - பொதுஜன முன்னணி மற்றும் ஜே.வி.பி. என்பன அரசாங்கத்தை குற்றஞ்சாட்டியுள்ளன.

அன்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, இனப்பிரச்சினைக்கான மாகாணசபைத் தீர்வினை முன்வைத்து உலக நாடுகளிடம் உதவி கேட்டபோது, பல நாடுகள் முன்வந்து நிதியுதவிகளை வழங்கின. இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளை அழைத்துச் சென்றால்தான் நிதியுதவி கிடைக்கும் என்ற அரசின் நிலைப்பாட்டை எதிர்கட்சிகள் விமர்சித்திருக்கின்றன.

இதற்கு அரசாங்கம் பதில் ஒன்றை வழங்கியிருக்கிறது. ஜே.ஆர்.ஜேவர்த்தனவின் காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட பல இயக்கங்கள் களத்தில் இருந்தன. போராட்டங்களை நடத்திக்கொண்டிருந்தன. இந்தியா மூன்றாம் நிலை மத்தியஸ் தத்தை வகித்தமையால், இந்தியாவை நம்பி சர்வதேச நாடுகள் இலங்கையின் அபிவிருத்திக்கு உதவியை வழங்கின. ஆனால் இன்று இருப்பது முழுமையான வித்தியா,சமான நிலை. தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தை அந்தஸ்து இலங்கை அரசாங்கத்துக்கு சமனாகி உயர்ந்திருக்கிறது. இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழர் காட்டவேண்டும், மீண்டும் போர் ஒன்றுக்குச் செல்ல மாட்டோம் என்ற உறுதியை வழங்க வேண்டும் எனச் சர்வதேச நாடுகள் எதிர்பார்த்தன.

அதனடிப்படையிலேயே ஒஸ்லோ மாநாடு இடம்பெற்று முடிந்துள்ளது. இதற்கிடையில் ஜனாதிபதி தமது வழமையான எதிர் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறார்

ஒஸ்லோ மாநாடு திருப்தி அளிப்பதாக கூறியுள்ள அவர், சர்வதேச மற்றும் உள்நாட்டு நிலவரங்களை எல்லாம் மறந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் அந்த மாநாட்டில் பங்கு கொண்டமையை ஆட்சேபித்திருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நீதிமன்றங்கள் மற்றும் காவல்மையங்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் திறந்திருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். புலிகளின் தமிழீழ நீதிமன்றங்களையும், காவல் மையங்களையும் மூடிவிட நடவடிக்கை எடுக்குமாறு முப்படையினருக்கும் தாம் உத்தரவிட்டிருப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார். இதன் அடுத்த கட்டமாகப் பிரதமரைச் சந்தித்த போது ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக்களே வியப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஒஸ்லோ மாநாடு நிறைவடைந்த நிலையில் பிரதம மந்திரி ஜனாதிபதியை சந்தித்தபோது, இந்த வியப்பான விடயம் வெளியானது. ஜனாதிபதி, தமிழீழ விடுதலைப் புலிகளின் இவ்வாறான நிறுவனங்களை மூடச் சொன்ன வேளையில், பிரதம மந்திரி கூறிய கருத்துக்களை ஜனாதிபதி அலட்சியப்படுத்தினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் - படைக்கட்டுப்பாட்டுப் பகுதியில் சட்டரீதியற்ற நிறுவனங்களை நடத்தினால், அவற்றை மூடிவிட உத்தரவிட்டிருப்பதாக பிரதம மந்திரி ஜனாதிபதியிடம் தெரிவித்தார். இதன்போது குறுக்கிட்ட ஜனாதிபதி, யதார்த்தத்துக்கு அப்பாற்பட்ட நிலையில், தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் சட்டரீதியற்ற நிறுவனங்கள் இயங்கினால், அவற்றை மூடிவிடுவதற்குப் படையின்ருக்கு உத்தரவிடவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த பல காலங்களாக நிதி மற்றும் நீதி அமைப்புக்களை நடாத்திவருவதை பிரதம மந்திரி சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் நீதி மற்றும் நிதி அமைப்புக்களை இயககி வருவது தொடர்பாக இப்போதே தகவல்கள் வெளியாகியுள்ளன என வியப்புடன் குறிப்பிட்டார். இதற்குப் பின்னர் பிரதமர் எதனையும் பேசவில்லை. ஜனாதிபதி இவ்வாறான கருத்தை வெளியிட்டதன் பின்னர் எவராலும் பேசமுடியாதுதானே?

இவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் கொழும்பு ஹைட் பார்க் இடத்தில், பிரிவினைக்கு எதிரான கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. வழமையாக இவ வாறான நிகழ்வுகளில் பங்கு கொணடு வரும் அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, விமல் வீரவன்ச ஆகியோருடன் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த கலாநிதி விக்னேஸ்வரனும் பங்கு கொண்டார்.

இதில் மங்கள சமரவீர கூறிய தகவல் கள் உண்மையில் புதிதாக இருந்தன. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் புதிய அரசியல் தீர்வு ஒன்றை தயாரித்து வருகிறது. நாட்டில் தென்னி லங்கையில் ஒரு பிரதம மந்திரி இயங் கும் அதேநேரம், வடக்கு - கிழக்கில் உதவிப் பிரதமர் ஒருவர் நியமிக்கப் படுவார். மத்தியில் நிதியமைச்சர் நிய மிக்கப்படும் நிலையில், வடக்கு - கிழக்கில் பிரதி நிதியமைச்சர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார். இவ்வாறான அம்சங்களைக் கொண்டு புதிய தீர்வு ஒன்றை அரசாங்கம் தயாரித்து வருவதாக குறிப்பிட்ட மங்கள சமரவீர, இது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நாட்டைப் பிரித்து கொடுக்கும் செயற்பாடே எனத் தெரிவித்தார்.

இவ்வகையில் பொதுஜன முன்னணியின் கருத்துக்கள், செயற்பாடுகள் யாவும் உறுதியான நிலைப்பாடுகள் இன்றி சென்று கொண்டிருக்கின்றன. இதன் ஒரு கட்டமாக ஜனாதிபதி, அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தீர்வு பேச்சுவார்த்தை ஆலோசனை ஒன்றை நடத்த முன்வந்துள்ளார். தற்சமயம் இனப்பிரச்சினைத் தீர்வு முன்னெடுப்பில் மூன்று தரப்புகள் மாத்திரமே பங்கு கொண்டுள்ளன. இதனை விடுத்து தீர்வுப் பேச்சுவார்த்தையில் அனைத்துக் கட்சிகளும் பங்கு கொள்ளவேண்டும் என அவர் பிரதம மந்திரியிடம் கேட்டிருக்கிறார். இதற்கு பிரதம மந்திரி பதில் எதனையும் வழங்கவில்லை. எனினும் நாடாளு மன்றத்தில் 'ஒஸ்லோ' மாநாடு தொடர்பாக அவர் அளித்த உரை ஒன்றில் சில தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினை தீர்வுக்கான மாதிரித் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து வருவதாக பிரதமர் இங்கு குறிப்பிட்டுள்ளார். அதேநேரம், இது தொடர்பில் அடுத்த வாரத்தில் ஒஸ்லோவில் நடை பெறும் பேச்சுவார்த்தையில் இதுபற்றிக் கலந்துரையாடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அப்பால், தென்னிலங்கையில் கடந்த 2 மாதகாலமாக இருந்து வந்த அரசியல் முறுகல் நிலை தணிந்திருக்கிறது. அரசாங்கம், தனது ஆடசியைத் தொடர்ந்து கொண்டு செலலலாம் என்ற நிலைப்பாடு ஏற்பட்டு வருகிறது. பொதுஜன முன்னணி, தற்போதைய நிலையில் மாற்று அரசாங்கத்திற் கான வாய்ப்புகளை பற்றி பேசாமல் இருப்தே சிறந்தது என தீர்மானித்துள்ளது. இதற்குப் பிரதான காரணம் பொதுஜன முன்னணி இன்னும் தளம்பல் நிலையில் இருப்பதுவும், சர்வதேசத்தின் ஆதரவு ஐக்கிய தேசிய முன்னணிக்குத் தொடர்வதுமே எனக் கொள்ளலாம்.

பொதுஜன முன்னணியைப் பொறுத்த வரையில் டிசம்பர் 5ஆம் திகதிக்கு பின்னர் தமது நடவடிக்கைகளில் மாற்றங்களை கொண்டு வர உத்தேசித்துள்ளது.

அரசாங்கம் பதவியேற்று ஒரு வருட காலம் எதிர்வரும் டிசம்பர் 5ஆம் திகதியுடன் முடிவடையும் நிலையில், தம்மை வலுப்படுத்திக் கொள்ளும் முகமாக ஜே.வி.பியுடன் அரசியல் இணக்க உடன்பாடு ஒன்றைச் செய்துகொள்ள பொதுஜன முன்னணி முயன்று வருகிறது. அதனடிப்படையில் 2003 ஆம் ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் அளவில் மாற்று அரசாங்க கொள்கையை முன்கொண்டுவரப் படலாம் என எதிர்பார்க்கிறது.



ஒஸ்லோ - சந்திரிகாவுக்கு வேப்பங்காயே!

மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் தென்னிலங்கை அரசியலுடன் இணையும் நிலை ஏற்பட்டிருக்கிறது. கொழும்பில் வந்து தங்கியிருப் பதை வெளிப்படுத்தும் அளவிற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தென்னிலங்கை அரசியலில் செல்வாக்கு பெற்றுள்ள னர். இவற்றையெல்லாம் பெரிதுபடுத் திக் கொண்டிருந்த தென்னிலங்கை இனவாதச் சக்திகள் என கூறப்படுவோரின் செயற்பாடுகளும் மங்கிமறைந்து போய்க்கொண்டிருக்கின்றன.

# மாயை உலகிலிருந்து விடுபட்டு நிஜ உலகிற்குள் பிரவேசியுங்கள்!

இன்று அநேக மக்கள் நிஜ உலகத்தைவிட்டு கனவு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இக்கனவுலகம் என்பது உண்மையாக எதுவுமில்லாத ஓர் மாயையான நிலையாகும். அவ்வித மான ஒரு கனவுலகத்தில் மக்கள் வாழ விரும்புவதற்கும் வாழ்ந்து கொண்டிருப்பதற்கும் காரணம், இறைவன் கொடுத்துள்ள காரியங்களிலும், ஆசீர்வாதங்களிலும், ஆற்றல்களிலும் அவர்களுக்குத் திருப்தி இல்லாததேயாகும். எம்மிடத்தில் இருப்பதில் எமக்குத் திருப்தியில்லை என்றால் இல்லாததை இருப்பதாக எண்ணி அதில் வாழ்ந்துகொண்டிருப்பது கனவுல்க வாழ்க்கையாகும்.

பரிசுத்த வேதாகமத்தில் யூதா, இறைசித்தத்திற்கு எதிராக வாழ்பவர்களையும், கபட உபதேசக்காரர்களை யும் "கனவுக்காரர்" எனக் குறிப்பிடுகிறார். ஏனெனில் மெய்யான உலகத்தை நம்பி வாழ இவர்கள் விரும்பாமல், பொய்யான உலகத்தை நம்பி அதனைப் பின்பற்றி வாழ விரும்புகின்றார்கள். அதனால், இறைவன் எடுத்துரைத்த உண்மைத் தத்துவத்தைத் தாம் நம்பாமல், சாத்தான் சொல்லும் பொய்களை நம்பி தங்கள் நாளாந்த வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான வர்களைத் தான் யூதா "கனவுக்காரர்" எனத் தன்னுடைய நிருபத்தில் குறிப்பிடுகின்றார்.

அன்று தேவன் 'நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை உண்ணவேண்டாம்! அதை நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்' என்று கட்டளையிட்டார் (ஆதி - 2:17). ஆனால், உண்டால் செத்து விடுவோம் என்ற நிஜ உலகில் வாழவிரும்பாத ஆதாமும் ஏவாளும் "நீங்கள் சாகவே சாவதில்லை! நீங்கள் இதை உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் நன்மை தீமை அறிந்து, இறைவனைப் போல் இருப்பீர்கள்" (ஆதி - 3:5) எனக் கூறிய சாத்தானின் பொய்யை நம்பி, தேவர்களைப் போல் இருப்போம் என்ற கனவுலகத்தில் வாழ முடிவு செய்தார்கள்.

## ஞாயிறு நற்சிந்தனை

இன்று நாம் எந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். நிஜ உலகத்திலா? அல்லது கற்பனை/கனவு உலகத்திலா? - இல்லை, இறைவன் கூறிய வார்த்தைகளின் வழியில் தான் நாம் உண்மை உலகை அறியலாம். பிசாசு/சாத்தான் எம்மைப் பழையான வழியில் நடத்தி, கானல் நீரைக் காட்டுவதுதான் மாய உலகாகும். இவ்விரண்டில் எதில் நாம் வாழ ஆசைப்படுகிறோம், எதை நாம் பின்பற்றத் தயாராக இருக்கிறோம்? - இறைவார்த்தைகளையா? அல்லது பொய்களையா? - இறை வார்த்தையை மெய்யாகவே விசுவாசிப்போமாயின், நிஜ உலகத்தில் வாழ்கிறவர்களாக இருப்போம். இறைவனுடைய வார்த்தையின் போதனையை பின்பற்றாமல் சாத்தானின் பொய்களை நம்புவோமாயின், மாய உலகத்தில் வாழ்கிறவர்களாக இருப்போம்.

இறைவன் எமக்கு ஈந்தவற் றில் நாம் திருப்தியுடன் வாழ்வோமாயின், கனவுலகத்தில், அதாவது இல்லாதது இருப்பது போல ஒரு கறபனை உலகத்தில் வாழவேணடிய அவசியமில்லை. ஆகவே நாம் இறைவன் எமக்குப் போதித்த வார்த்தையிலும், எமக்கு தந்துள்ள எண்ணிலடங்காத ஆற்றல்கள், ஆசீர்வாதங்களிலும் திருப்தியுடன் வாழத் தீர்மானம் எடுப்போம்.

சி.என்.ஹெய்ன்ஸ்

# குளத்தூர் மணியை விடுவிப்பதற்கான வீரப்பனின் காலக்கெடு முடிவடைந்தது!

## - நாகப்பா உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என அச்சம் -


நாகப்பா

நேற்று முன்தினத்துடன் குளத்தூர் மணி மீதான வழக்குகளை வாபஸ் பெறுவதற்கான வீரப்பனது காலக்கெடு முடிவடைந்துள்ளது.

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவை கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் வீரப்பனால் கடத்தித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந் நிலையில் வீரப்பன், குளத்தூர் மணி மீதான குற்றச்சாட்டுக்களை கர்நாடக அரசு வாபஸ் பெறவேண்டும் எனக் கோரியுள்ளதுடன் இதற்கான கால எல்லையை நவம்பர் 29 திகதி வரை வீரப்பன் நீடித்திருந்தார்.

இந்நிலையில் காலக்கெடு முடிவடைந்த நிலையில் கொளத்தூர் மணி மீதான வழக்குகளை வாபஸ் பெறுவதிலுள்ள நிர்வாக ரீதியான தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இன்னமும் ஓரிரு தினங்களில் குளத்தூர் மணி மீதான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுவிடும் என கர்நாடக அரசு அறிவித்துள்ளது.

மேலும் வீரப்பன் விதித்த காலக்கெடு நேற்று முன்தினத்துடன் முடிவடைந்துள்ளதால் நாகப்பா உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது.

இந்நிலையில் வீரப்பனிடம் நாகப்பாவை ஒன்றும் செய்து விட வேண்டாம் எனக் கோரிக்கையை வானொலி மூலமாக விடவுள்ளதாக கர்நாடக சட்ட மந்திரி சந்திர கவுடா கூறியுள்ளார்.

இதேவேளை - தமிழக எல்லைக்குள் குளத்தூர் மணி நுழைந்தால் தாம் கைது செய்யவுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

# பாகிஸ்தானில் இஸ்லாமியச் சட்டம்; வடமேல் மாகாண முதல்வர் கூறுகிறார்!


ஆதரவாளர்களுடன் புதிய முதல்வர்

பாகிஸ்தானின் வடமேல் மாகாண முதலமைச்சர் நாடு பூராகவும் இஸ்லாமியச்சட்டங்களை நடைமுறைப்படுத்தப் போவதாகத் தனது கன்னிப் பேச்சிலேயே தெரிவித்துள்ளார்.

அத்தோடு இஸ்லாமியப் பண்புகளுக் கடிப்படையாக மக்கள் பயணம் செய்யும் பஸ் வண்டிகளில் இசைத்தட்டுக்கள் ஒலிபரப்பாவது தவிர்க்கப்படுவதுடன், தொழுகைக்கான நேரங்களில் பயணம் செய்யும் பஸ்கள் இடைநிறுத்தப்பட்டு தொழுகைகள் மேற்கொள்ளப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பாகிஸ்தானில் சூதாட்ட விடுதிகள், மதுபான சாலைகள் என்பவற்றை மூடப்படுவதற்கான ஆலோசனைகளையும் தாம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 50 வருடங்களில் முதற்தடைவையாக இஸ்லாமியக் கட்சி பாகிஸ்தான் மாநிலத்தில் பதவியில் அமர்ந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

# ஐவரிக்கோஸ்ட் மோதலுக்குள் அகப்பட்டுள்ள 30 ஆயிரம் அகதிகள்


வெளியேறிச் செல்லும் அகதிகள்

(அபிஜான்)

ஐவரிக்கோஸ்ட்டில் புதிதாக ஆரம்பித்துள்ள யுத்தத்திற்குள் 30 ஆயிரம் அகதிகள் சிக்குண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள் கூறியுள்ளன.

நீதிக்கான இயக்கமென அழைக்கப்படும் போராளிகள்- இராணுவ ரீதியில் முக்கியமான மத்திய நகரான 'டனசி'யில் இருந்து 'மான்' நகரை நோக்கி நகர்ந்து வருவதால் அப்பகுதியில் மக்கள் சிக்குண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதத்தின் ஐவரிக்கோஸ்ட்டானது- அரசாங்கத்தினது கட்டுப்பாட்டுப் பகுதி மற்றும் போராளிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியென இரண்டு பிரிவுகளாகப் பிளவுபட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் முகவர்கள்- முப்பதாயிரம் மக்கள் போரினுள் சிக்குண்டுள்ள போதிலும் அவர்களுடன் தம்மால் தொடர்பு கொள்ள முடியவில்லை எனக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# பெண்கள் மீது வன்புணர்வில் ஈடுபடுவோரை மரணதண்டனைக்கு உள்ளாக்கச் சட்டம்!

## இந்திய அரசாங்கம் ஆலோசனை


பெர்ணான்டஸ்

பெண்களை வன்புணர்வுக் குட்படுத்தும் குற்றவாளிகளுக்கு அதியுயர்ந்த தண்டனையான மரண தண்டனை அளிக்கத்தக்க வகையில் சட்டத்தை கொண்டு வர ஆலோசனை செய்வதாக துணைப் பிரதமர் அத்வானி நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அத்வானியின் மேற்படி தண்டனை குறித்து, பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸிடம் பத்திரிகையாளர்கள் வினாவியபோது - பெண்களை வன்முறைக்குட்படுத்தியவர்களை சீனாவின் பாணியில் தண்டிக்க வேண்டும் என்பதே எனது கருத்தெனத் தெரிவித்துள்ளார்.

சீனாவில் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டில் குற்றம் இனங்காணப்பட்டு, மேற்படி நபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டால் ஊழல்வாதியை சுட்டுக் கொல்வதற்குத் தேவையான துப்பாக்கி ரவைக்கான பணம் அவரது குடும்பத்திடமே கேட்டு வாங்கிக் கொள்ளப்படும்.

இதேபோன்ற தண்டனைதான் பெண்கள் மீதான வன்முறைக் குற்றவாளிக்கும் வழங்கப்படவேண்டும் எனபதே தனது பரிந்துரையென பெர்ணான்டஸ் கூறியுள்ளார்.


# STUDY IN INDIA

## Admission Notice - Year 2003

### Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

### MUTHAYAMMAL College of Arts& Science affiliated to PERIYAR UNIVERSITY (Salem)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. Biocemistry | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc. Biotechnology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Physics | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Microbiology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Com. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Cs | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.B.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.C.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |

### SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY ( Channai)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

### நீங்கள் O/L முடித்துவிட்டீர்களா???

இந்தியாவில் Diploma (3வருடம்) பயிற்சி நெறியில் சேர்ந்து, பின் ANNA UNIVERSITY (மேலும் 2 வருடம்) பயின்று பட்டதாரியாக (Graduate/ Degree Holder) வாய்ப்பு.

3 Years Diploma in
- CIVIL ENGINEERING
- MECHANICAL ENGINEERING
- ELECTRICAL & ELECTRONICS
- COMPUTER TECHNOLOGY
- ELECTRONICS & COMMUNICATION
- AUTOMOBILE
- INFORMATION TECHNOLOGY
- ELECTRONICS & INSTRUMENTATION*

MUTHAYAMMAL POLYTECHNIC
Rasipuram - 637 408, Namakkal Dt, T.N, India

S.K.AdsPrints Salem

◈ Separate Hostel for Boys & Girls and with all Meals ◈ All necessary VISA formalities will be handled by the College

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, 'Colombo Plaza', 50 Galle Road, Colombo-06.
Tel: 072-984297 074-512468

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களை பொருத்தவும் மிதப்புப் பற்களை 3 மாதத்தில் சீர்செய்து கொள்ளவும் நாடுங்கள்
எரிக் கணேஸ்
மூக்குக் கண்ணாடி அகமும், பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 2222486 (சி-198) கிளை: கொக்குவில், சுன்னாகம்.

# பாதுகாப்பு வலயம், மீள்குடியமர்வு பலாலியில் இன்று முக்கிய மாநாடு!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும், மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாகவும், இன்று பலாலி இராணுவ முகாமில் மிக முக்கியமான மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கொட்பிறி குணதிலக தலைமையிலான உயர் அதிகாரிகள் குழுவொன்று இன்று பலாலி இராணுவ முகாமிற்கு விஜயம் செய்யவுள்ளது. அங்கு, இக்குழுவினர் - யாழ்.மாவட்ட உயர் இராணுவ அதிகாரிகளுடன் உயர் மட்டப் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இச்சந்திப்பின் போது யாழ்.குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மாற்றங்கள் செய்வது பற்றியும் இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

## அரசாங்க எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

அரசாங்க எழுதுவினைஞர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை டிசம்பர் மாதம் 14ம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கை முழுவதிலும் 125 பிரதான நகரங்களில் 2300 நிலையங்களில் இந்தப் போட்டிப் பரீட்சை நடைபெறும்.

நாடு முழுவதிலுமாக ஏராளமானோர் இப்போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

# மாணவர் எடுத்துச் சென்ற பொருட்கள் குறிகாட்டுவானில் கொட்டப்பட்டன

(நெடுந்தீவு)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் நெடுந்தீவுக்கு எடுத்துச்செல்லப்பட்ட உணவுப் பொருட்கள் நேற்று கடற்படையினரின் முன்பாக கொட்டப்பட்டன. நேற்று மதியம் மூன்றாவது தடவையாகவும் மாணவர்களால் இந்த உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டபோது குறிகாட்டுவானில் நின்றிருந்த கடற்படையினர் அவர்களை மேலும் தொடர்ந்து செல்ல விடாது தடுத்தனர்.

உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்ல அரச அதிபரின் அனுமதிப் பத்திரம் தேவை என கடற்படையினர் கூறியபோது, மாணவர்களுக்கும் படையினருக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமுற்ற மாணவர்கள் தாம் கொண்டு சென்ற உணவுப்பொருட்களை படையினர் முன்பாக நிலத்தில் கொட்டிவிட்டுத் திரும்பினர்.

ஏற்கனவே இருமுறை பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு நெடுந்தீவுக்கு உணவுப் பொருட்கள் கொண்டு சென்றபோதும் கடற்படை அனுமதிக்காதமை குறிப்பிடத்தக்கது.

# மேலதிக அரச அதிபருடன் மனித உரிமை ஆணைக்குழு பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகை தந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்.அரசாங்க அதிபர் அலுவலகத்தில் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கத்தைச் சந்தித்து பேச்சு நடாத்தினர்.

இச்சந்திப்பின் போது கொழும்பிலிருந்து வருகை தந்தவர்களான- மனித உரிமைகள் ஆணைக்குழுவின தலைவர் கொட்பிறி குணதிலக பணிபாளர்களான எம்.செல்வக்குமரன், எம்.சி.எம் இக்பால், திருமதி மனோரி முத்தவெட்டுகம மற்றும் முன்னாள் யாழ்.அரச அதிபர் தேவநேசன் நேசையா, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.இணைப்பதிகாரி சந்திரசேகரா ஆகியோர் பங்கு பற்றினர். (க,லி)

## நாளைய....

தவிர எவ்வாறு செலவிடுவது என்பது குறித்து எந்தத்தலையீடும் செய்யாது. ஆனால், இந்த நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்பதை நோர்வே கவனிக்கும் எனவும் கிஜோர்வன் தெரிவித்தார்.

இதேவேளை - சர்வதேச ரீதியில் பெறப்படும் நிதி, அதனைத் தரும் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக பயன்படுத்தப்படுகின்றதா என்பதும் கண்காணிக்கப்படும் என நோர்வேயின் விசேட தூதுவா எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

## தலைவர்....

நடவடிக்கை குறித்து மகிழ்ச்சியும் திருப்தியும் வெளியிட்ட ஆயர், இம் முயற்சியில் மிகவும் விட்டுக் கொடுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டுவரும் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு பாராட்டையும் வாழ்த்துக்களையும் சு.ப.தமிழ்ச் செல்வன் ஊடாகத் தெரிவித்தார். (க,லி)

# நகரில் ஒலி அளவைக் குறைக்க யாழ்.மாநகர சபை நடவடிக்கை!

யாழ்.மாநகர சபையின் தீர்மானத்திற்கு அமைய, வானொலிகள், ஒலிபெருக்கிகள் யாவற்றினதும் ஒலியளவு 20 டெசிபலுக்குட்பட்டதாக இருப்பதை - அனைத்துப் பாவனையாளர்களும் உறுதிப்படுததிக் கொள்ளுமாறு மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பொது இடங்களில், விற்பனை நிலையங்கள், மற்றும் வீடுகளில் இயங்கும் வானொலி, மற்றும் ஒலி பெருக்கிகளின் சத்தம் கட்டுபாடின்றி அதியுச்ச நிலையில் இருப்பதனால் மாணவர்கள் தமது கல்வியில் முழுமையாக ஈடுபட முடியாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (13)

# பிரதமரின் விசேட தூதுவர்....

தனிப்பட்ட ஆலோசகராகவும் இருந்து வந்திருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது இவரை விசேடமாக அழைத்து, புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் வட- கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய இயல்பு நிலையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இதன் தொடர்ச்சியாக - பிரதமரின் விசேடமான, தனிப்பட்ட வகையிலான நடவடிக்கை ஒன்றின் நிமித்தமாகவே யாழ்ப்பாணத்திற்கான இவரின் நேற்றைய விஜயம் அமைந்திருந்தது.

நேற்றைய விஜயத்தின்போது, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, மற்றும் உயர் இராணுவ அதிகாரிகள் சகிதம் குடாநாட்டின் அநேக பகுதிகளுக்கும் இவர் விஜயம்செய்தார். உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையுடன், குடாநாட்டின் நிலைமைகள் குறித்தும் மக்களின் வாழ்வில் முழுமையான இயல்பு நிலை தோன்றாமைக்கான காரணங்கள் பற்றியும் இவர் விரிவாக ஆராய்ந்தார்.

நீண்டகால யுத்த அனர்த்தங்கள், பாதிப்புக்கள், அழிவுகள், மற்றும் மக்களின் சமூக பொருளாதார பின்னடைவுகள் என்பவற்றை உடனடியாக அகற்றுவது சாத்தியமில்லை என்றும், இவ்வாறான விடயங்களில் துரித நடவடிக்கை எடுப்பதற்கு போதிய நிதிவசதி இல்லை என்றும், அனைத்து விடயங்களிலும் மக்களின் நேரடிப் பங்களிப்பு, ஆலோசனை இதுவரை பெற்றுக் கொள்ளப்படவில்லை - இவை போன்ற காரணங்களினால் மக்களின் வாழ்வில் சகஜநிலை தோன்றுவது தொடர்ந்து தாமதமாகி வருகின்றது என்றும் யாழ்.ஆயர் அப்போது அவருக்கு விளக்கமளித்தார்.

அத்துடன் குறிப்பிட்ட அதிகாரி சந்தித்த யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சிற்றம்பலம், யாழ்.விடயம் தொடாபாக வரலாற்று ரீதியான குறிப்புக்களை விளக்கியும், நீண்டகாலமாகத் தமிழ்மக்கள் அரசினால் புறக்கணிக்கப்பட்டு வந்தமையையும் அரச தரப்பும் புலிகள் தரப்பும் ஒருவர் மீது ஒருவர் ஆழமான நம்பிக்கையை ஏற்படுத்துவதில் உள்ள காலதாமதங்களையும் எடுத்துக் கூறி விளக்கமளித்தார்.

இவற்றை விட, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும் சேர் மைக்கல் ரோஸ் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ். மாவட்ட இராணுவ உயர் அதிகாரிகளுடனும் மேற்படி விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

நேற்று வருகை தந்த இப் பிரிட்டிஷ் படைஅதிகாரி, பிரிட்டனின் 22 ஆம் எஸ்.ஏ.எஸ் (**Special Air Services Regiment**) படையின் கட்டளை அதிகாரியாக பணிபுரிந்தவர். 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவர் பொஸ்னியாவில் ஐ.நா. பாதுகாப்புப் படைப்பிரிவிலும் பணியாற்றியுள்ளார். (க,லி)

அர்ச்சனா ஸ்கிறீன் பிறிண்டிங் அக்கடமி
சான்றிதழ் வழங்கும் நிகழ்வு
இடம் : நாவலர் மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 05.12.2002
நேரம் : பி.ப.2.00 மணி (புதிய நேரம்)
முக்கிய குறிப்பு:
இறுதிப் பிரிவு வகுப்புக்கள் 02.12.2002, 03.12.2002, 04.12.2002 இல் நடைபெறும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.
அடுத்த வகுப்புகள் பற்றிய விபரம் பத்திரிகைகள் மூலம் அறியத்தருவோம்.
தொடர்புகளுக்கு :
Career. Com Institute
79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0777 - 706334
(சி-243)

O/L - 2002
பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்
DMI
யாழ்.நகர்
(050)

ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம் மல்லாகம்
தரம் 5 முதல் O/L வரையான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.
01.12.02 இன்று
சுன்னாகத்தில் காலை 8.00மணி
மல்லாகத்தில் மாலை 3.00மணி
எமது வழமையான Super grade ஆசிரியர் குழுவின் போதனை.
நிர்வாகி
(049)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவசம்பு தங்கமுத்து

மீசாலை கிழக்கைச் சேர்ந்த சிவசம்பு தங்கமுத்து 29.11.2002. (வெள்ளிக்கிழமை) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.சிவசம்புவின் அன்பு மனைவியும் திருமதி தா.சிவபாக்கியம், திருமதி சு. செல்வநாயகி, திருமதி து. பகவதிப்பிள்ளை, பாலசிங்கம் (நோர்வே), பாலச்சந்திரன் (மாவட்ட வைத்தியசாலை, பருத்தித்துறை) பாலதுரை(லண்டன்), செல்வநாயகம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயரும்

வே.தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) ந.சுப்பிரமணியம்(இளைப்பாறிய அஞ்சல் ஊழியர்) அமரர் மு.துரைராஜா, திருமதி பா. யோகராணி (நோர்வே), திருமதி பா.கெங்காதேவி திருமதி பா. மதுராதேவி (லண்டன்), திருமதி செ.சுசிலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.12.2002. இன்று (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

தகவல்:
பா.கஜலக்ஷன்
(பேரன்)

(சி/247)

## பஸ்தியாம்பிள்ளை கிறிஸ்தோப்பர் (இரத்தினம்)

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

கரவெட்டி மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகதர் அமரர் பஸ்தியாம்பிள்ளை கிறிஸ்தோப்பர் 28.11.2002 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

இவர் காலம் சென்ற சி.பஸ்தியாம்பிள்ளை, இசபெல்லா தம்பதியரின் அருமை மகனும், காலம் சென்ற திரேசம்மா கிறிஸ்தோப்பர் (ஆசிரியை, புதுக்குடியிருப்பு) அவர்களின் அன்புக் கணவரும், திரு.கிறிஸ் ரெட்ணக்குமார் (கனடா), அருட்திரு கி.ஜோர்ஜ் ஜெயக்குமார்(இயக்குனர், கியூடெக்), திருமதி. ரெட்ணகுமாரி புஸ்பராசா (லண்டன்), திரு.யோசப் ஜீவக்குமார் (கனடா), திருமதி ஜெயக்குமாரியேசுதாசன் (கனடா), திரு.றெக்ஸ் ராஜாகுமார்(கனடா), திரு. ஜஸ்ரன் நிமலகுமார் (கனடா), திருமதி கிறிசாந்தி கோபி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை(2.12.2002.) காலை 9.00 மணிக்கு கரவெட்டி இல்லத்தில் நடைபெறும் திருப்பலியுடன் நல்லடக்கத்திற்காக கரவெட்டி கீரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொளவும்.

*சரஸ்வதி வித்தியாலய வீதி,*
*அந்தோனியார் கோவலடி,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
அருட்திரு.
கி.ஜோ.ஜெயக்குமார்
(கியூடெக்)

(சி/248)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.12.2002 அன்று பொன்னுத்துரை குகதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.